டிசம்பர்-25 நாளை மறுநாள்

புதுகை

# வரலாறு

நாளிதழுடன்

# 2024 காலண்டர்

அன்பளிப்பாக கிடைக்கும்




யாரும் வழங்கிடாத பிரம்மாண்டமான

(18X23) சைஸ்

❖ நட்சத்திரம் ❖ திதி ❖ நல்ல நேரம் ❖ சுபமுகூர்த்த தினங்கள்
❖ விரத தினங்கள் ❖ சர்வமத பண்டிகை நாட்கள்
❖ திருவண்ணாமலை கிரிவல நாட்கள் ❖ வாஸ்து நாட்கள்

பஞ்சாங்கத்துக்கு இணையாக
அனைத்தையும் துல்லியமாக
சொல்லும் காலண்டர்

பக்கத்திற்கு
ஒரு மாதம்

அருகில் உள்ள ஏஜென்ட் / கடைக்காரரிடம்
முன்பதிவு செய்துகொள்ளுங்கள்

தொடர்புக்கு : 7502051351

ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




சனி ❖ டிசம்பர். 23, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 79 ❖ ரூ.10

## தென்மாவட்ட மழை வெள்ளத்தில் 31 பேர் பலி

# பட்டியல்

## இந்த ஆண்டு தமிழகத்துக்கு வழங்க வேண்டிய பேரிடர் நிதி ரூ. 900 கோடியை மத்திய அரசு வழங்கிவிட்டது : நிர்மலா சீதாராமன் பேட்டி

டெல்லி : டிச. 23–

**தென் மாவட்டங்களில் ஏற்பட்ட மழை வெள்ளத்தில் சிக்கி இதுவரை 31 பேர் உயிரிழந்துள்ளனர் என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். மேலும், இந்த ஆண்டு தமிழகத்துக்கு வழங்க வேண்டிய பேரிடர் நிதி ரூ. 900 கோடியை மத்திய அரசு வழங்கிவிட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**



திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் ஏற்பட்ட மழை வெள்ளத்தில் சிக்கிய மக்களை மீட்க மத்திய அரசு என்ன செய்தது என்பது குறித்து டெல்லியில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் விளக்கம் அளித்துள்ளார். அவர், உள்துறை அமைச்சகத்தில் இருந்த 2 கட்டுப்பாட்டு அறைகளும் 24 மணி நேரமும் கண்காணித்தன. வெள்ளம் வடிவதற்கு முன்பாகவே மீட்புப் பணியில் மத்தியக் குழு இறங்கியது என்று குறிப்பிட்டார்.

மேலும், "இந்திய ராணுவத்தின் 9 ஹெலிகாப்டர்கள் மூலம் வெள்ளத்தில் சிக்கிய மக்களை மீட்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. விமானப்படை, கடற்படை மூலமும் மீட்புப்பணிகள் துரிதமாக நடைபெற்றன. நெல்லை மற்றும் தூத்துக்குடியில், வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களில் 42 ஆயிரம் பேர் ஹெலிகாப்டர் மூலம் மீட்கப்பட்டுள்ளனர்.

தென் மாவட்ட மழை, வெள்ளத்தில் சிக்கி இதுவரை 31 பேர் உயிரிழந்துள்ளனர். ஒட்டுமொத்தமாக வெள்ளத்தில் சிக்கிய 42,290 பேர் மீட்கப்பட்டுள்ளனர். களப்பணிகள் விரைந்து நடைபெற்றதால், அதிகமான மக்கள் மீட்கப்பட்டனர் என்றும் அவர் தெரிவித்துளள்ர்.

ஸ்ரீவைகுண்டம் ரயில் நிலையத்தில் சிக்கிய 800க்கும் மேற்பட்ட பயணிகள் மீட்கப்பட்டனர். வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்க மத்தியப் படையினர் விரைந்து செயல்பட்டனர். தேசிய பேரிடர் மீட்புப் படை, கடலோர காவல் படை மூலம் ஏராளமானோர் மீட்கப்பட்டுள்ளனர். 4 தென் மாவட்டங்களுக்கும் உடனடியாக உதவும்படி நான் வைத்தக் கோரிக்கையை ஏற்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா உடனடியாக உதவிகளை அளித்தார்.

மாநில பேரிடர் நிவாரண நிதிக்கு வழங்க வேண்டிய இரண்டாவது தவணை டிசம்பர் 12ம் தேதியே அதாவது முன்கூட்டியே வழங்கப்பட்டுவிட்டது. தென் மாவட்டங்களில் மழை, வெள்ள பாதிப்பு ஏற்படுவதற்கு முன்பே, மத்திய அரசு, நிலுவைத் தொகையை வழங்கிவிட்டது. அதாவது, இந்த ஆண்டு மத்திய அரசு வழங்க வேண்டிய ரூ.900 கோடியையும் தமிழகத்துக்கு வழங்கப்பட்டுவிட்டது" என்று தெரிவித்துள்ளார்.

## கறம்பக்குடியில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை அமைச்சர் மெய்யநாதன் தொடங்கி வைத்தார்

கறம்பக்குடி : டிச. 23–

கறம்பக்குடியில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தார்.



புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி பேரூராட்சி, ராஜசங்கீதா திருமண மண்டபத்தில், மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ், மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தார். மேலும் மக்களுடன் முதல்வர் திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட மனுதாரருக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் பட்டா மாறுதலுக்கான ஆணையினை வழங்கி பேசுகையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் அவர்களைச் சென்றுசேரும் வகையில் மக்களுடன் முதல்வர் என்ற புதிய திட்டத்தை 18.12.2023 அன்று தொடங்கிவைத்தார்கள். அந்தவகையில் கறம்பக்குடி பேரூராட்சி, ராஜசங்கீதா திருமண மண்டபத்தில், "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ், மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாம் நடைபெறுகிறது.

அதன்படி, மக்களுடன் முதல்வர் இப்புதிய திட்டத்தின் கீழ், பொதுமக்கள் அதிகமாக அணுகும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நகராட்சி நிர்வாகத்துறை, ஊரக வளர்ச்சித் துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சமூகநலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, கூட்டுறவுத்துறை, மகளிர் மேம்பாட்டுக் கழகம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, எரிசக்தி துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை ஆகிய 13 அரசுத் துறைகள் சார்ந்த கோரிக்கைகளைப் பெற்று தீர்வு காண்பதற்கு முகாம்கள் நடத்தப்படுகிறது.

இந்த சிறப்பு முகாம்களில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் அனைவரும் ஒரே குடையின்கீழ் மக்களின் கோரிக்கைகளைப் பெற்று பதிவு செய்வார்கள். முகாம்களில் பெறப்படும் மனுக்கள் அனைத்தும், சம்பந்தப்பட்ட துறைகளால் 30 தினங்களுக்குள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் மக்களுக்கு வழங்கப்படும்.

மேலும் அனைத்து தரப்பு மக்களுக்கும் மேற்கண்ட 13 அரசுத் துறைகளின் சேவைகள் எளிதில் கிடைத்திடவும், தாமதங்களை தவிர்த்திட வேண்டும் என்பதும் தான் இந்த திட்டத்தின் நோக்கமாகும். இந்த சிறப்பு முகாம்களில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் அனைவரும் ஒரே குடையின்கீழ் மக்களின் கோரிக்கைகளைப் பெற்று பதிவு செய்வார்கள். முகாம்களில் பெறப்படும் மனுக்கள் அனைத்தும், சம்பந்தப்பட்ட துறைகளால் 30 தினங்களுக்குள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் மக்களுக்கு வழங்கப்படும்.

எனவே பொதுமக்கள் அனைவரும் தங்களுக்குத் தேவையான கோரிக்கைகளை மனுக்களாக அளித்து, பயன்பெற்றுக் கொள்ளலாம் என சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) செய்யது முகம்மது, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அமீர் பாஷா, பேரூராட்சித் தலைவர் முருகேசன், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த.சந்திரசேகரன், அட்மாகமிட்டித்தலைவர் முத்துகிருஷ்ணன், பேரூராட்சி துணைத்தலைவர் நைனா முகமது, வட்டாட்சியர் நாகநாதன், பேரூராட்சி செயல் அலுவலர் கார்த்திகேயன், வட்டார வளர்ச்சி அலுவலர் ரமேஷ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## ரூ.79.16 இலட்சம் மதிப்பீட்டில் 207 பயனாளிகளுக்கு 5 பவுன் நகைக்கடன் தள்ளுபடி சான்றிதழ்களை சட்டத்துறை அமைச்சர் வழங்கினார்

பொன்னமராவதி, டிச. 23–

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், மேலத்தானியம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், கூட்டுறவுத்துறையின் சார்பில், ரூ.79.16 இலட்சம் மதிப்பீட்டில் 207 பயனாளிகளுக்கு, 5 பவுன் நகைக்கடன் தள்ளுபடி சான்றிதழ்களை, மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி தலைமையில் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல்தடுப்புசட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று வழங்கினார்.



பின்னர் அவர் தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய பொதுமக்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் கூட்டுறவுத்துறையின் சார்பில் பொதுமக்களின் நலனிற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதன்படி இன்றையதினம் 5 பவுன் வரையிலான நகைக்கடன்கள் தள்ளுபடி செய்து அதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்களான, பொன்னமராவதியில் 32 பயனாளிகளுக்கு ரூ.15.64 இலட்சமும், செம்பூதியில் 12 பயனாளிகளுக்கு ரூ.4.38 இலட்சமும், திருக்களம்பூர் 26 பயனாளிகளுக்கு ரூ.11.07 இலட்சமும், நல்லூரில் 28 பயனாளிகளுக்கு ரூ.7.80 இலட்சமும், மேலத்தானியத்தில் 46 பயனாளிகளுக்கு ரூ.15.54 இலட்சமும், அரசமலையில் 3 பயனாளிகளுக்கு ரூ.0.78 இலட்சமும், அம்மன்குறிச்சியில் 17 பயனாளிகளுக்கு ரூ.8.43 இலட்சமும், ஆலவயலில் 43 பயனாளிகளுக்கு ரூ.15.51 இலட்சமும் என மொத்தம் 207 பயனாளிகளுக்கு ரூ.79.16 இலட்சம் மதிப்பீட்டில் நகைக்கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டு, அதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பயன்பெற்ற பயனாளிகளுக்கு இது பேருதவியாக அமையும். தமிழக அரசின் இதுபோன்ற நலத்திட்டங்களை பொதுமக்கள் நன்கு அறிந்து கொள்வது மட்டுமல்லாமல், தங்களை போன்ற மற்றவர்களுக்கும் இத்திட்டம் குறித்து எடுத்துரைக்க வேண்டும். என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், அறந்தாங்கி சரக துணைப் பதிவாளர் ஆறுமுகப்பெருமாள், பொன்னமராவதி கள அலுவலர் மற்றும் செயலாட்சியர் அன்னலட்சுமி, பொன்னமராவதி பொதுவிநியோகத் திட்ட கூட்டுறவு சார் பதிவாளர் மற்றும் செயலாட்சியர் ஷியாமளா, அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், வட்டாட்சியர் சாந்தா, மேலத்தானிய ஊராட்சிமன்றத்தலைவர் முருகேசன், நீர்பாசன குழுத் தலைவர் முத்து, உள்ளாட்சிஅமைப்புகளின் பிரதிநிதிகள், கூட்டுறவுத்துறை அலுவலர்கள், செயலாட்சியர்கள், பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## 146 எம்பி–க்கள் சஸ்பெண்ட் ஜந்தர் மந்தரில் இந்தியா கூட்டணி போராட்டம்

டெல்லி, டிச. 23–

நாடாளுமன்றத்தில் அடுத்தடுத்து 146 எம்பி-க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டதை கண்டித்து, 'ஜனநாயகத்தை பாதுகாப்பீர்' என்ற தலைப்பில் இந்தியா கூட்டணி நேற்று போராட்டம் நடத்தியது.



நாடாளுமன்றத்தில் கடந்த 13-ம் தேதி பார்வையாளர் மாடத்திலிருந்து இருவர் குதித்து வண்ணப் புகை குப்பிகளை வீசினர். இந்த பாதுகாப்பு மீறல் குறித்து உள் துறை அமைச்சர் அமித்ஷா நாடாளுமன்றத்தில் விளக்கம் அளிக்க வேண்டும் என எதிர்க்கட்சியினர் வலியுறுத்தினர்.

இதனால் இரு அவைகளிலும் அமளி ஏற்பட்டது. இதையடுத்து, அவை நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படுத்தியதாக மக்களவையில் இருந்து 100 பேரும், மாநிலங்களவையில் இருந்து 46 பேரும் என 146 எம்பி-க்கள் தொடர்ச்சியாக இடைநீக்கம் செய்யப்பட்டனர். இடைநீக்கம் செய்யப்பட்ட அனைத்து எம்பி-க்களும், இந்தியா கூட்டணியில் அங்கம் வகிக்கும் 28 கட்சிகளைச் சேர்ந்தவர்கள்.

இந்நிலையில், எம்பி-க்கள் இடைநீக்கத்தை கண்டித்து தேசிய அளவில் போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, டெல்லி ஜந்தர் மந்தரில் இந்தியா கூட்டணி கட்சிகள் நேற்று கண்டன போராட்டம் நடத்தின.

இந்தப் போராட்டத்தின் போது எம்பி-க்கள் வைத்திருந்த எதிர்ப்பு அட்டையில், 'ஜனநாயகத்தை பாதுகாப்பீர்', 'ஜனநாயகம் ஆபத்தில் உள்ளது' ஆகிய வாசகங்கள் இடம்பெற்றிருந்தன. இப்போராட்டத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் சீதாராம் யெச்சூரி, திமுக எம்பி-யான திருச்சி சிவா உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் தலைவர்கள், எம்பி-க்கள் கலந்து கொண்டனர்.

## சென்னை வானிலை ஆய்வு மையத்தை மூடிவிடலாம் – அன்புமணி ஆவேசம்

நெல்லை : டிச. 23–

''பரவலாக மழை பெய்யும், மிதமான மழை பெய்யும் என்று சொல்வதற்குதான் வானிலை ஆய்வு மையமா?. அதனை 5வது படிக்கும் மாணவனே சொல்லி விடுவான். சுதந்திரத்திற்கு முன்பு வானிலை ஆய்வு மையம் எப்படி இருந்ததோ அதேபோலத்தான் தற்போதும் உள்ளது. அதனால் அதனை இழுத்து மூடிவிடுவதே சிறந்ததாக இருக்கும்'' என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கடுமையாக விமர்சித்துள்ளார்.



கடந்த 16 மற்றும் 17ம் தேதி பெய்தகனமழையால் பாதிக்கப்பட்ட நெல்லை, தூத்துக்குடி பகுதிகளில் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் நேரில் ஆய்வு மேற்கொண்டார். இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர் நிவாரணப்பொருட்களை வழங்கினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ''கனமழையால் தூத்துக்குடி, நெல்லை, தென்காசி, விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இதுபோன்ற மழையை தாங்கள் இதுவரை பார்த்ததில்லை என இங்கு இருக்கும் மக்கள் சொல்கிறார்கள். மிகப்பெரிய அளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளது. இன்னும் மக்கள் இயல்பு நிலைக்கு திரும்பவில்லை. இன்னும் பல கிராமங்களுக்கு அதிகாரிகள் செல்லவில்லை. அரசு வேலைகளை வேகப்படுத்த வேண்டும். எத்தனை அமைச்சர்கள் இருந்தாலும் அதிகாரிகள் இருந்தாலும் அது போதுமானது இல்லை.

முதல்வர் மீண்டும் களத்திற்கு வர வேண்டும். அப்போதுதான் பணிகள் வேகமெடுக்கும். அரசு அறிவித்துள்ள நிவாரணம் போதுமானதாக இல்லை. நிவாரணத்தொகையை உயர்த்தி வழங்க வேண்டும். பெரும் மழை வெள்ளம், வறட்சி போன்றவை நாம் திரும்ப திரும்ப கேட்க போகிறோம். இந்த விவகாரத்தில் அரசு முறையாக நடவடிக்கை எடுத்ததாக தெரியவில்லை.

வரும்முன்பே காப்போம் என்பதும் கிடையாது. வந்த பிறகும் காப்போம் என்பதும் அரசுக்கு கிடையாது. சென்னை வானிலை ஆய்வு மையத்தை மூடிவிடலாம். சுதந்திரத்திற்கு முன்பு உள்ள நிலைதான் இப்போதும் உள்ளது. பரவலாக மழை மிதமான மழை என்பதெல்லாம் 5ம் வகுப்பு படிக்கும் மாணவன் கூட சொல்லிவிடுவான். எந்த ஒரு தொழில்நுட்ப முன்னேற்றமும் இல்லை. அதனால் வானிலை ஆய்வு மையத்தை மூடிவிட வேண்டும்'' என்றார்.

# இன்று

**23-12-23**



ஸ்ரீவைகுண்ட ஏகாதசி

சக வருடம் 1945 பௌஷம் 02

வெந்தயம் வெட்டிவேர் பயத்தம் மாவு சேர்த்து அரைத்து குளித்தால் பொடுகு குறையும்

| சோபகிருது மார்கழி 7 | DEC - SAT சனி | ஜமா அத்துல் ஆகிர் 9 | இராசிபலன் |
|---|---|---|---|
| | | வளர்பிறை 357 / 008 | |

வளர்.ஏகாதசி 05.01 (கா.06.27) பரணி 40.23 (மா.10.34) தியாஜ் 05.35 அகஸ் 28.25 சித்த 40.23 மேல் அமிர்த. ஸ்ரீவைகுண்ட ஏகாதசி. சகல விஷ்ணு ஆலயங்களிலும் பரமபத வாசல் திறப்பு விழா. ஸ்ரீரங்கம் நம்பெருமாள் முத்தங்கி சேவை. சகல விஷ்ணுவாலயங்களிலும் இராபத்து உற்சவசேவை.

| | நல்லநேரம் | கௌரி.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.30-8.00 | 12.15-1.15 | 09.00 | 06.00 | 01.30 |
| மாலை | 4.45-5.45 | 9.30-10.30 | 10.30 | 07.30 | 03.00 |

சூலம் : கிழக்கு; பரிகாரம் : தயிர்; தனுர் லக்கனம் இருப்பு நா. 4 வி. 22; சந்திராஷ்டமம் உத்திரம் ஹஸ்தம்; கரணம் : 12-1.30; சூரிய உதயம் : 6.25

அவசரம் என்றால் அண்டாவில் கூட கை நுழையாது

இராசிபலன்: மேஷம் - போட்டி; ரிஷபம் - பக்தி; மிதுனம் - பரிவு; கடகம் - நிறைவு; சிம்மம் - சுகம்; கன்னி - தனம்; துலாம் - சினம்; விருச்சி - மறதி; தனுசு - எதிர்ப்பு; மகரம் - மேன்மை; கும்பம் - அசதி; மீனம் - ஆர்வம்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

வேண்டாம் என்று தூக்கி
ஏறியப்பட்ட விதை கூட மரமாக
வளர்ந்து வருகிறது..

உன்னை வேண்டாம் என்று
தூக்கி எறிந்தவர் மத்தியில்
இருந்து எழுந்து வா!

வாழ்க்கையில் உன்னை வெல்ல
யாரும் இல்லை!!






## புதுக்கோட்டை ஈரோ கிட்ஸ் பள்ளியில் கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்பட்டது

புதுக்கோட்டை : டிச. 23-

புதுக்கோட்டை, கூடல் நகரில் உள்ள ஈரோ கிட்ஸ் பள்ளியில் கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு பள்ளியின் தாளாளர் கவிஞர் ஆர்எம்வீ. கதிரேசன் தலைமை தங்கினார். முதல்வர் தேவிகீர்த்தனா, ஆர்வமுடன் வந்த மழலையர் அனைவரையும் வரவேற்றார். குழந்தைகளின் கண்ணைக்கவரும் நடனங்கள் நாடகம் சிறப்புடன் நடந்தது பள்ளி வளாத்தில் அமைக்கப் பட்டுள்ள கிறிஸ்துமஸ் மரம் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இக்காட்சியை பெற்றோர்களும் மாணவர்களும் வியப்புடன் கண்டுகளித்தனர். கிறிஸ்துமஸ் தாத்தா எனும் சான்டாகிளாஸ் ஒவ்வொரு மாணவச் செல்வங்களுக்கு இனிப்புகள் வழங்கி கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்தார்.



குழந்தைகள் சான்டாகிளாஸ் தாத்தாவோடு கைகுலுக்கி இனிப்புகளை பெற்று மகிழ்ந்தனர். பள்ளியின் தாளாளர் கவிஞர் ஆர்எம்வீ .கதிரேசன் வாழ்த்துக்கள் கூறி அவர் பேசும்போது கருணையே வடிவான இயேசுபிரான் அவதரித்த தினத்தை கொண்டாடுவது என்பது ஒட்டுமொத்த மனித குலத்துக்குமான செய்தியாகிய அன்பு கருணை, ஒழுக்கம், சக உயிர்களை நேசித்தல் ஆகிய பண்புகளை குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களுக்கு உணர்த்துவதேயாகும்.

இயேசுபிரானின் அன்புக் கட்டளைகளுள் ஒன்றான உன்னிடத் தில் நீ அன்பு கூறுவதுபோல பிறனிடத்திலும் அன்பு கூறுவாய் என்கின்ற கருத்தை குழந்தைகள் மனதில் ஏற்றி சக மாணவர்களிடம் அன்புசெலுத்த வேண்டும் என்று தெரிவித்தார். விழாவில், ஆசிரியர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டு கிறிஸ்துமஸ் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

## கவுதம சிகாமணிக்கு எதிரான வழக்கு குற்றச்சாட்டுப் பதிவுக்காக ஜன.4க்கு ஒத்திவைப்பு

சென்னை , டிச. 23-

கள்ளக்குறிச்சி எம்.பி. கவுதம சிகாமணிக்கு எதிரான சட்டவிரோத பணப் பரிமாற்ற தடை சட்ட வழக்கை குற்றச்சாட்டுப் பதிவுக்காக ஜனவரி 4-ம் தேதிக்கு ஒத்திவைத்து 12-வது கூடுதல் அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2006- 2011 திமுக ஆட்சி காலத்தில் கனிமவளத் துறை அமைச்சராக பதவி வகித்த பொன்முடி, அவரது மகனும், தற்போதைய கள்ளக்குறிச்சி திமுக எம்.பி.,யுமான கவுதம சிகாமணி மற்றும் உறவினர் ஜெயச்சந்திரன், ராஜமகேந்திரன், கோபிநாத், கோதகுமார், சதானந்தன், லோகநாதன் உள்ளிட்டோர் செம்மண் குவாரிகளில் சட்டவிரோதமாக செம்மண் எடுத்து அரசுக்கு ரூ.28 கோடி வரை இழப்பு ஏற்படுத்தியதாக விழுப்புரம் மாவட்ட குற்றப்பிரிவு போலீஸார் கடந்த 2012-ல் வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த வழக்கு விழுப்புரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.



இந்த வழக்கில் லோகநாதன் மட்டும் இறந்துவிட்டார். இந்நிலையில், இந்த வழக்கின் அடிப்படையில் சட்ட விரோத பணப் பரிவர்த்தனை தடைச் சட்டத்தின் கீழ் அமலாக்கத் துறை திமுக எம்.பி, கவுதமசிகாமணி உள்ளிட்டோருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்துள்ளது. இதன் தொடர்ச்சியாக கடந்த மாதம் முன்னாள் அமைச்சர் பொன்முடியின் வீட்டில் சோதனை நடத்திய அமலாக்கத் துறை அதிகாரிகள் பொன்முடி மற்றும் அவருடைய மகன் கவுதம சிகாமணி ஆகியோரிடம் விசாரணை நடத்தினர்.

இந்த வழக்கில் திமுக எம்.பி. கவுதம சிகாமணி உள்ளிட்ட 6 பேருக்கு எதிராக அமலாக்கத் துறை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் 90 பக்க குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தது.

இந்தக் குற்றப்பத்திரிகை எண்ணிடப்பட்டு, கோப்புகளை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்றம், வழக்கை 12-வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்துக்கு மாற்றி உத்தரவிட்டது. இந்த வழக்கை குற்றச்சாட்டுகள் பதிவுக்காக நீதிமன்றம் ஒத்திவைத்திருந்தது.

இந்த வழக்கு, நீதிபதி மலர் வாலண்டினா முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, கவுதம சிகாமணி ஆஜராகவில்லை. அவரது தரப்பில் ஆஜராகியிருந்த வழக்கறிஞர் வழக்கு விசாரணையை அடுத்த மாதத்துக்கு தள்ளிவைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார். இதனை ஏற்க மறுத்த நீதிபதி, வழக்கை வரும் ஜனவரி 4-ம் தேதிக்கு தள்ளிவைத்து உத்தரவிட்டார். மேலும், அன்றைய தினம் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்படும். எனவே, வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள அனைவரும் குற்றச்சாட்டு பதிவுக்காக நேரில் ஆஜராக வேண்டும் என்று நீதிபதி பிறப்பித்த உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.








தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரனின் தாயார் அமராவதி அம்மாள் காலமானதையொட்டி. அவரது உடலுக்கு தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வே.ஜெயபாலன் நிர்வாகிகளுடன் சென்று மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.



தென்காசி தெற்கு மாவட்டம் சுரண்டை நகராட்சியில் உள்ள வார்டுகள் 10,11,12,25,26,27 ஆகியவைகளுக்கான மக்களுடன் முதல்வர் திட்டத்தை கீழச்சுரண்டை குறிஞ்சி மயில் மண்டபத்தில் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெய பாலன் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சுரண்டை நகர்மன்ற தலைவர் வள்ளி முருகன், அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## வல்லத்திராகோட்டை பள்ளியில் நாட்டு நலப்பணித் திட்ட தொடக்க விழா

புதுக்கோட்டை , டிச. 23-

புதுக்கோட்டை மாவட்டம், வல்லதிராகோட்டை, இராமசாமி தெய்வானை அம்மாள் அரசு மேல்நிலைப் பள்ளியில் நாட்டு நலப்பணி திட்ட முகாம் தொடக்க விழா நடைபெற்றது.

பள்ளி மேலாண்மை குழு தலைவி பிரியா கலந்துகொண்டு முகாமை தொடங்கி வைத்தார். பள்ளித் தலைமை ஆசிரியர் குமார் வழிகாட்டுதல்களை வழங்கி 900 பேர் படிக்கும் பள்ளியில் 25 மாணவர்களுக்கு மட்டும் கிடைத்த இந்த பொன்னான வாய்ப்பை பயனுள்ள வகையில் பயன்படுத்தி நாட்டு நலப் பணியை செய்து நல்ல மாணவர்களாக தங்களை



அடையாளப்படுத்திக்கொள்ள வேண்டும், அர்ப்பணிப்பு மனப்பான்மை வளர்த்துக்கொள்ள வேண்டும், நாட்டு நலப்பணியை வாழ்நாள் முழுக்க தொடர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ஆசிரியர்கள் சண்முகம், கார்த்திகேயன், விஜயலெட்சுமி, விஜயரெகுநாதன், கணேசன், யோகராஜ், உமாராணி, முத்துமணி, ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். நிகழ்ச்சியை நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் ஆண்டனி ஒருங்கிணைத்தார். நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

## பெருங்களூர் அரசுப்பள்ளியில் வனத்துறை சார்பில் மரக்கன்று நடும் விழா

ஆதனக்கோட்டை : டிச. 23, பெருங்களூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் வனத்துறை சார்பில் மரக்கன்று நடும் விழா நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வனச்சரகத்திற்கு உட்பட்ட பெருங்களூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு பல்லுயிர் பெருக்கம் மற்றும் பசுமையாக்கள் திட்டத்தின் மூலம் நடைபெற்ற இந்த விழாவிற்கு புதுக்கோட்டை மாவட்ட வன அலுவலர் கணேசலிங்கம் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டு துவக்கி வைத்தார். பள்ளி வளாகத்தில் நீர்மருது, வேங்கை, மகோகனி, சொர்க்கம், வேம்பு, பாதாம், இலுப்பை, நெல்லி, நாவல், தானி உள்ளிட்ட 13 வகை



இன மரக்கன்றுகளான 150 மரக்கன்றுகளை வன அலுவலர்கள் மற்றும் பள்ளி ஆசிரியர்கள், பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டு நடவு செய்தனர்.

இந்த நிகழ்ச்சியில் வனச்சரக அலுவலர் சதாசிவம், வனவர் முருகானந்தம், மகேந்திரன், பள்ளி தலைமை ஆசிரியர் ரவி, பள்ளி மேலாண்மை குழு தலைவி சிவரஞ்சனி, ஒன்றிய கவுன்சிலர் முத்துலட்சுமி சாமியய்யா, பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் ரஜினி, பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் என திரளானோர் கலந்து கொண்டனர். பள்ளி மாணவர்களுக்கு வனத்துறை சார்பில் மரக்கன்றுகள் நடுவதன் அவசியத்தையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தினர்.

## தென்காசியில் பாரதிய ஜனதா கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

தென்காசி, டிச. 23-

இந்தியதுணைஜனாதிபதி, மற்றும் பாராளுமன்ற சபாநாயகரை அவதூறாக பேசிய எதிர்க்கட்சிகளை சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களை கண்டித்து தென்காசி மாவட்ட பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் புதிய பேருந்து நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் ராஜேஷ் ராஜா தலைமை வகித்தார். மாவட்ட பொதுச் செயலாளர் பாலகுருநாதன், அருள் செல்வன், ராமநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட பார்வையாளர் மகாராஜன் கண்டன உரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியில் மாநில செயற்குழு உறுப்பினர் அன்புராஜ்,



மாவட்ட பொருளாளர் பாலகிருஷ்ணன், மாவட்ட துணைத் தலைவர்கள் முத்துக்குமார், பாலமுருகன், பால்ராஜ், மாவட்ட செயலாளர் புலிக்குட்டி, மாவட்ட இளைஞரணித் தலைவர் முப்புடாதி, ஓபிசி அணி தலைவர் மாரியப்பன், பட்டியல் அணித் தலைவர் ராமர், உள்ளாட்சி பிரிவு மாவட்ட தலைவர் கருப்பசாமி, அரசு தொடர்பு பிரிவு மாவட்டத் தலைவர் குத்தாலிங்கம், பிரச்சார பிரிவு மாவட்டத் தலைவர் சங்கரநாராயணன், ஆன்மீக பிரிவு மாவட்ட தலைவர் வெங்கடேஷ், தென்காசி நகர தலைவர் மந்திரமூர்த்தி, ஒன்றிய தலைவர் பண்டரிநாதன், முருகன், சுரேஷ், மாரியப்பன், ரத்தினகுமார், ஐயப்பன், பரமசிவன், கணேசன், மகளிர் அணி மாவட்ட பொதுச் செயலாளர் வளர்மதி, இளைஞர் அணி துணை தலைவர் விவேக், விவசாய அணி பொதுச் செயலாளர் விஜய் சேகர் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர்.

## சங்கரன்கோவிலில் நாளை புத்தகக் கண்காட்சி தொடக்கம்



சங்கரன்கோவில் : டிச. 23, சங்கரன்கோவிலில் புத்தகத் திருவிழா டிச.24 ஆம் தேதி நாளை தொடங்க உள்ள நிலையில் புத்தகத் திருவிழா நடைபெறும் மைதானத்தை, திமுக வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ மற்றும் வருவாய்துறையினர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

தென்காசி மாவட்ட 2 வது பொதிகை புத்தகத் திருவிழா சங்கரன்கோவில் கோமதி அம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் வருகிற டிச. 24-ம் தேதி முதல் ஜன. 2ஆம் தேதி வரை நடைபெறுகிறது. 10 நாட்கள் நடைபெறும் புத்தகத் திருவிழாவில் மாலை 5 மணிக்கு மேல் தமிழகத்தில் உள்ள இலக்கிய ஆளுமைகள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் பங்கேற்று பேசுகின்றனர். நகைச்சுவை சிந்தனை பட்டிமன்றங்கள், மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், நாட்டுப்புற கிராமிய கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடக்கிறது.

இந்நிலையில் சங்கரன்கோவில் கோமதி அம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் மேடை, பந்தல், மின் விளக்குகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதனை வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ, மாவட்ட வருவாய் அலுவலர் பத்மாவதி, கோட்டாட்சியர் சுப்புலட்சுமி, வட்டாட்சியர் பாபு, நகராட்சி சேர்மன் உமா மகேஸ்வரி சரவணன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். தொடர்ந்து ராஜா எம்எல்ஏ கூறியதாவது:

சங்கரன்கோவில் பொதுமக்கள் மற்றும் மாணவர்களிடையே வாசிப்பை ஊக்குவிக்கும் வகையில் அனைத்து சங்கங்கள் மற்றும் அனைத்துக் கட்சியினரும் ஒன்றிணைந்து புத்தகத் திருவிழாவை வெற்றி பெறச் செய்ய வேண்டுகிறேன். தமிழகத்திலேயே சங்கரன்கோவில் புத்தகத் திருவிழா மிகச் சிறப்பாக நடந்தது என்ற பெருமையை நாம் பெற வேண்டும். அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என்று கூறினார்.

## தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்ட நாள் அறந்தாங்கியில் கொண்டாட்டம்

அறந்தாங்கி , டிச. 23-

தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்ட 27.12.1956ஆம் நாளை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் அனைத்து மாவட்டங்களிலும் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் ஆட்சிமொழிச் சட்டவாரம் கொண்டாடப்பட்டு வருகிறது.

அவ்வகையில் இவ்வாண்டும் ஆட்சிமொழிச் சட்ட வாரம் கொண்டாடப்பட்டு வருகிறது. நான்காம் நாள் நிகழ்வாக அரசு ஊழியர்கள், கல்லூரி மாணவர்கள், தமிழறிஞர்கள், தமிழார்வலர்கள் ஆகியோர் பங்கேற்ற “ஆட்சிமொழித் திட்ட விளக்கக் கூட்டம்” அறந்தாங்கி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது. தமிழ் வளர்ச்சித் துறை



உதவியாளர் சுப்புராமன் வரவேற்புரையாற்றினார்.

பொறுப்பு முதல்வர் பேராசிரியர் இரமேசு தலைமையுரையாற்றினார். தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் காளிதாஸ் வாழ்த்துரை வழங்கினார். வணிகவியல்துறைத்தலைவர் பேராசிரியர் சீனிவாசன் நன்றியுரையாற்றினார். ‘கவிஞர் ஜீ.வி. தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாக கல்லூரி மாணவர்கள் பயன்பெறத்தக்க வகையிலான திட்டங்கள் குறித்தும், தமிழ் வளர்ச்சிக்கு மாணவர்களின் கடமைகள், தமிழில் பெயர் எழுதுதல், ஒப்பமிடுதல் ஆகியவற்றை வலியுறுத்தி ஆட்சிமொழித் திட்ட விளக்கவுரையாற்றினார். இந்நிகழ்வில் கல்லூரியில் பணியாற்றும் பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், மாணவர்கள் உள்பட 150க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 4 மாவட்டங்களில் 67 ஆயிரம் பேருக்கு சிகிச்சை : அமைச்சர் சுப்பிரமணியன் பேட்டி

*தூத்துக்குடி : டிச. 23, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 4 மாவட்டங்களில் 67 ஆயிரம் பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி, நெல்லை தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் முகாம் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. 190 நடமாடும் மருத்துவ குழுக்கள் மூலம் 2,882 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.*

*வெள்ளம் பாதித்த பகுதிகளில் உள்ள மக்களுக்கு காய்ச்சல், வயிற்றுப்போக்கு உள்ளிட்ட நோய்த் தொற்றுகள் பரவும் அபாயம் உள்ளது. சுகாதாரத்துறை நடவடிக்கைகள் எடுத்திருந்தாலும் பொது மக்களும் விழிப்போடு இருக்க வேண்டும். அனைத்து கிராமங்களுக்கும் வரும் நடமாடும் மருத்துவ குழுவிடம் சென்று உடல் பரிசோதனை செய்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்*



*வெள்ளம் பாதித்த மாவட்டங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள், பொது மருத்துவமனைகளின் சிகிச்சை உபகரணங்கள் என சுகாதார கட்டமைப்புகளில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால், வெள்ளம் சூழ தொடங்கிய உடனே மருத்துவமனைகளில் முன்னெடுத்த துரித நடவடிக்கைகாரணமாக அசம்பாவிதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஆய்வு செய்த பின் அமைச்சர் சுப்பிரமணியன் பேட்டி அளித்துள்ளார்.*

*திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் கடந்த 17, 18 ஆகிய 2 நாள்கள் வரலாறு காணாத அளவுக்குப் பெய்த அதிகன மழையால் அந்த மாவட்டங்களின் பெரும்பாலான குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்தது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டதுடன், போக்குவரத்தும் தடைபட்டது. இந்நிலையில் நேற்று தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரியில் அமைச்சர் சுப்ரமணியன் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வில் பணியாளர்களுக்கு பல்வேறு அறிவுரை வழங்கினார்.*

23.12.2023 ❖ வரலாறு

# பாரளுமன்ற உறுப்பினர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டதை கண்டித்து காங்கிரஸ் கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டம்



சென்னை,டிச,23

இந்திய பாரளுமன்றத்தில் நடப்பு குளிர்காலக் கூட்டத்தொடரில் அமளியில் ஈடுபட்டதற்காக 141 எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள்மீதுசஸ்பெண்ட் செய்த நடவடிக்கையை கண்டித்து வண்ணாரப்பேட்டை தபால் நிலையம் அருகே வடசென்னை கிழக்கு மாவட்டம் காங்கிரஸ் கட்சியினர் ஒன்றிய அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருவொற்றியூர் நெடுஞ்சாலை மணி கூண்டு அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வடசென்னை கிழக்கு மாவட்டம் காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவர் திரவியம் தலைமையில் 100க்கும் மேற்பட்ட காங்கிரஸ் கட்சியினர் கலந்து கொண்டு கண்டன கோஷங்களை எழுப்பினர்.

ஒன்றிய அரசின் நடவடிக்கைக்கு வரும் நாடாளுமன்றதேர்தலில் மக்கள்பாடம் புகட்டுவார்கள் என எடுத்துரைத்தனர்

# பாஜக அரசை கண்டித்து காங்கிரஸ் கட்சி சார்பில் தாமரைப்பாக்கம் கூட்டுச்சாலையில் கண்டன ஆர்ப்பாட்டம்



ஊத்துக்கோட்டை, டிச23–

கடந்த 13-ம் தேதி நாடாளுமன்றத்தில் மர்ம நபர்களால் நடத்தப்பட்ட புகைக் குண்டு தாக்குதலை கண்டித்தும்,142 நாடாளுமன்ற உறுப்பினர்களை இடைநீக்கம் செய்ததை கண்டித்தும்,பாஜக அரசின் சர்வாதிகாரப்போக்கை கண்டித்தும் காங்கிரஸ் கட்சி சார்பில் தாமரைப்பாக்கம் கூட்டுச்சாலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருவள்ளூர் தெற்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு திருவள்ளூர் தெற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் தாஸ் தலைமை தாங்கினார். நாடாளுமன்றத்தில் பாதுகாப்பற்ற சூழல் ஏற்பட்டுள்ளதாககூறியும், இதற்குக்காரணமான மத்தியில் ஆட்சி செய்யும் பாஜக அரசை கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பினர்.

இதில்,மாநில செயலாளர் ஆர்.ஆர்.சாந்தகுமார், இளைஞர் காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் காங்கை எம்.குமார்,எல்லாபுரம் தெற்கு வட்டார தலைவர் சிவசங்கரன், ஒன்றியகவுன்சிலர் திருமலை, சோழவரம் வடக்கு வட்டார காங்கிரஸ் தலைவர் வேல்முருகன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தத்தனூர் எம் ஆர் பொறியியல் கல்லூரியில் கருத்தரங்கம்



அரியலூர், டிச.23

உடையார்பாளையம் அடுத்துள்ள, தத்தனூர் மீனாட்சி இராமசாமி பொறியியல் கல்லூரியில், மெண்ட்டோர்ஷிப் ப்ரோக்ராம் என்கிற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

மீனாட்சி இராமசாமி பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், கல்வி நிறுவனங்களின் தாளாளர் எம். ஆர். இரகுநாதன் தலைமை வகித்தார். இயக்குனர்கள் இராஜமாணிக்கம், தியாகராஜன் மற்றும் பொறியியல் கல்லூரியின் நிர்வாக இயக்குனர் செந்தில்குமரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முதல்வர் மதியழகன் வரவேற்று பேசினார்.

சிறப்பு விருந்தினராக, சிங்கப்பூர் டெக் மகேந்திரா நிறுவனத்தில் கம்ப்யூட்டர் பொறியாளராக பணிபுரியும் த.வேல்முருகன் கலந்து கொண்டுசிறப்புரையாற்றினார். இணையம் பற்றி பல்வேறு தகவல்களையும், ஊடகங்களின் வளர்ச்சி மற்றும் தேவைகள் பற்றியும், வங்கிகளின் இணையவழி செயல்பாடு குறித்தும் விவரித்து கூறினார்.

தொடர்ந்து மாணவர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்தார். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை துறை பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

# "நிதிஷ் குமார் கருத்தை ஸ்டாலின் எதிர்க்காதது ஏன் ?" – ஹெச்.ராஜா கேள்வி

காரைக்குடி : டிச. 23,

"இந்தியா கூட்டணியின் கூட்டத்தில் பிஹார் முதல்வர் நிதிஷ் குமார் தெரிவித்த கருத்தை எதிர்த்து மு.க.ஸ்டாலின் வெளிநடப்பு செய்யாதது ஏன்" என்று பாஜக மூத்த தலைவர் ஹெச்.ராஜா கேள்வி எழுப்பினார்.

காரைக்குடியில் செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "இதுவரை எங்களது அமைச்சர்கள் ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டதில்லை என திமுகவினர் கூறி வந்தனர். பொன்முடிக்கு தற்போது தண்டனை வழங்கப்பட்டுள்ளதை அடுத்து, இனிமேல் அவர்களால் மக்கள் முன்பாக முகம் காட்ட முடியாது. சனிப் பெயர்ச்சியால் திமுகவுக்கு கெட்ட நேரம் தொடங்கிவிட்டது என்று சொல்லலாம்.

அக்கட்சியின் மூத்த அமைச்சர் ஒருவர் வரும் முன் காப்போம் என்பதுபோல் மருத்துவமனையில் உள்ளார். மணலில் அரசுக்கு வருமானம் ரூ.30 கோடி என்றால், அமைச்சர் வீட்டுக்கு ரூ.4,000 கோடி சென்றுள்ளதாக அமலாக்கத் துறையினர் கூறுகின்றனர். திமுக ஆட்சியை அகற்றுவது தான் தமிழக மக்களுக்கு விடிவு காலமாக இருக்கும்.

'இந்தியா' கூட்டணியின் கூட்டத்தில் இந்திதேசியமொழி, அதை தெரிந்து வைத்திருக்க வேண்டும். அதனால் இந்தியை மொழி பெயர்ப்பு செய்யுமாறு கேட்கக் கூடாது என்று பிஹார் முதல்வர் நிதிஷ் குமார் கூறியபோது, அதைக் கண்டித்து மு.க.ஸ்டாலின் ஏன் வெளி நடப்பு செய்யவில்லை? 'இண்டியா' கூட்டணியின் தலைவர் யார் என்று அவர்களால் முடிவு செய்ய முடியவில்லை. அவர்களே ஒன்றுமையாக இல்லாத போது அந்தக் கூட்டணியை பாஜக உடைக்க வேண்டிய தேவை இல்லை" என்று கூறினார்.



▶ தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீ வைகுண்டம் ஆழ்வார் திருநகரி பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 300 குடும்பங்களுக்கு தமிழ் சேவா சங்கத்தின் நிறுவன அறங்காவலர் ஞான சரவண வேல் அறிவுறுத்தலின் படி தமிழ் சேவாசங்க மக்கள் தொடர்பு அலுவலர் ராஜேஷ் தலைமையில் நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது



▶ கட்சி (அரசியல்) சார்பற்ற சம்யுக்த் கிசான் மோர்ச்சா எனப்படும் ஐக்கிய விவசாயிகள் கூட்டமைப்பு சார்பாக நேற்று சென்னையில் பத்திரிகை நிருபர்கள் சங்கத்தின் கூட்ட அரங்கத்தில் நடந்த விவசாயிகளின் மகா பஞ்சாயத்து நிகழ்ச்சியில் இந்திய ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் விவசாயிகள் அணியின் மாநில தலைவர் டாக்டர். எஸ். ஆனந்த்குமார் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் பிரதிநிதியாக அழைக்கப்பட்டு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஆதரவளித்து ஆலோசனைகள் வழங்கினார். யூனியன் பிரதேச விவசாயிகளின் பிரச்சனைகளை தேசிய அளவில் பிரதிபலிக்க இந்த கூட்டமைப்பில் விவசாயிகள் இணைந்தால் அந்த கட்டமைப்பு எதிர்காலத்தில் அவர்களுக்கு அது உதவும் என்றார் அவர்.

# சீர்காழி நகராட்சி கூட்டத்தில் உறுப்பினர்கள் இடையே கடும் வாக்குவாதம்



*சீர்காழி ,டிச. 23–*

*சீர்காழி நகராட்சி சாதாரண கூட்டம் நகர மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரி தலைமையில் நடைபெற்றது. துணைத் தலைவர் சுப்பராயன், நகராட்சி ஆணையர் ஹேமலதா, பணித்தள மேற்பார்வையாளர் விஜயேந்திரன் வருவாய் ஆய்வாளர் கோபிநாத் நகர அமைப்பு ஆய்வாளர் மரகதம் முன்னிலை வைத்தனர்.*

*கூட்டத்தில் நகர மன்ற உறுப்பினர்கள் பங்கேற்று தங்கள் பகுதி குறைகளை தெரிவித்து வந்தனர். அப்போது அதிமுக நகர மன்ற உறுப்பினர் ரமாமணி தனது வார்டுக்கு ஆட்சியர் ஆய்வுக்கு வரும் போது ஏன் தகவல் அளிக்கவில்லை என நகர்மன்ற தலைவர் முன்பு சென்று ஆவேசமாக கேள்வி எழுப்பினார். பின்னர் உறுப்பினர் பாஸ்கரன், தனிப்பட்ட முறையில் என்னை பற்றி ஆணையரிடம் சில உறுப்பினர்கள் புகார் தெரிவித்தது குறித்து பேசினார். அப்போது நகர்மன்ற உறுப்பினர்கள் சிலர் நேரடியாக கடும் வாக்குவாதத்தில் ஈடுப்பட்டனர்.*

*மேஜையிலிருந்த மைக்கு ஒன்று தள்ளிவிடப்பட்டதால் நகர்மன்ற கூட்டத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. நகர்மன்ற தலைவர் மணி அடித்து சமாதானம் செய்ய முயற்சித்தும் உறுப்பினர்கள் வாக்குவாதம் நிறுத்தப்படாததால், நகர மன்ற தலைவர் மன்ற கூட்டத்தை தற்காலிகமாக ஒத்தி வைத்து கூட்டத்தில் இருந்து பாதியிலேயே வெளியேறி தனது அறைக்கு சென்றார்.*

*பின்னர் அரைமணிநேரம் கழித்து மீண்டும்நகரமன்றகூட்டம் தொடங்கி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.*

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கத்தின் சார்பில் பெரியபாளையத்தில் ஆர்ப்பாட்டம்



ஊத்துக்கோட்டை, டிச23–

தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கத்தின் மாநில பேரவை கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் நேற்று தமிழகம் முழுவதும் மதியம் உணவு இடைவேளையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில், ஒரு பகுதியாக திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையத்தில் உள்ள எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில், சத்துணவு மையங்களில் காலியாக உள்ள 50 ஆயிரம் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும்.மக்கள் நலப் பணியாளர்கள் அனைவருக்கும் காலமுறை ஊதியம் வழங்க வேண்டும்.

ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர், இரவு காவலர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன கோஷங்களை எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு,தமிழ்நாடு ஊரக வளர்ச்சி அலுவலர்கள் சங்க மாவட்ட இணை செயலாளர் ந.பொன்னரசு தலைமை தாங்கினார்.

ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்க வட்ட கிளை தலைவர் உமாநாத்,வட்ட கிளை செயலாளர் வசந்தகுமார்,வட்ட கிளை பொருளாளர் சரவணன், சத்துணவு அமைப்பாளர் சங்க தலைவர் சிவலிங்கம், செயலாளர் தினேஷ், பொருளாளர் காந்திமதி, மக்கள் நல பணியாளர் சங்க தலைவர் ஹரிச்செல்வம், செயலாளர் மோகன்,மாவட்ட செயலாளர் சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இதில், சத்துணவு அமைப்பாளர் சங்க மாவட்ட தலைவர் சிவா கலந்து கொண்டு நிறைவுரை ஆற்றி பேசினார். இதில், ஏராளமானோர் கலந்து கொண்டனர்.முடிவில்,ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்க வட்ட கிளைச் செயலாளர் வசந்தகுமார் நன்றி கூறினார்.

### சென்னை எண்ணூர் சிவன்படை குப்பம் பகுதியில்

# ஆற்றில் கலந்த கச்சா படலத்தை பார்வையிட்ட பின் பசுமை தாயகம் அமைப்பின் தலைவர் சௌமியா அன்புமணி குற்றச்சாட்டு



சென்னை, டிச. 23–

மிக்ஜாம் புயலின் போது எண்ணூர் கடற்பகுதியிலும் ஆற்றிலும் குடியிருப்பு பகுதிகளிலும் சிபிசிஎல் இருந்து கச்சா எண்ணெய் கழிவுகளானது கலந்தது எண்ணூர் பகுதியில் உள்ள மீனவ கிராமங்கள் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் மீனவ கிராமங்களில் சிவன்படை குப்பம் கமலாம்பாள் நகர் பகுதியில் பசுமைதாயகம் அமைப்பின்தலைவர் சௌமியா அன்புமணி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து மீனவர்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

இதனையடுத்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய சௌமியா அன்புமணி எண்ணெய் கழிவுகளில் இருந்து வெளியேறிய நச்சில் இருந்து பறவைகள் மீன்கள் இறந்துவிட்டது. மக்களுக்கு மூச்சு திணறல் தோல்நோய் ஏற்பட்டுள்ளது எண்ணெய் கசிவு ஏற்பட்டதையடுத்து மீனவர்களின் வாழ்வாதாரம் கடந்த ஒருமாத காலமாக ஒன்றும் இல்லாமல் உள்ளது.

இந்த நிகழ்வை அரசும் தொழிற்சாலைகளும் மறைத்துவிட்டதாகவும் ஒரு பாத்திரத்தில் எண்ணெய் எடுக்க வேண்டுமென்றாலே பஞ்சும் இரும்பும் வைத்து எடுக்கும் நிலையில் சாதாரண பேப்பரையும் பஞ்சையும் வைத்து ஆற்றை சுத்தப்படுத்துவதா என்று கேள்வி எழுப்பினார்.

கசிந்தது கழிவு எண்ணெய்யா அல்லது மறு சுழற்சி எண்ணெய்யா என்பதை ஐஐடி ஆய்வு செய்ய வேண்டும் இந்த சம்பவத்திற்கு தொழிற்சாலைகள் தான் பதில் சொல்ல வேண்டும் அவர்கள் தான் நிவாரணம் தர வேண்டும்.

அரசுஅறிவித்த நிவாரணம் போதாது சொசஸ்தலை ஆற்றை சுத்தபடுத்தியும் ஆழப்படுத்தியும் தர வேண்டும் இதை செய்திருந்தாலே வெள்ளம் வந்திருக்காது. பள்ளிக்கரணை சதுப்பு நில பகுதியையும் தயார் செய்து வைத்திருக்க வேண்டும் எப்போது மழை பெய்கிறதா அப்போது நிவாரணம் வழங்கிவிட்டு ஹெலிகாப்டரில் பொட்டலம் போடுவதால் மட்டும் எல்லாம் முடிந்துவிடாது. நிலைமை சீராவதற்கு ஒருமாத காலம் கூட ஆகலாம் பாதிப்பு வருடகணக்கில் கூட ஆகலாம் என்று தெரிவித்தார்.

கொற்றலை ஆற்றை பாதுகாப்பு பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று வேண்டுகோள் வைத்தார் அப்போதுதான் இந்த பகுதியில் குப்பைகள் கொட்ட மாட்டார்கள் ஆக்கிரமிப்பு செய்ய மாட்டார்கள் என தெரிவித்தார்

# எதிர்கட்சி எம்பிக்கள் சஸ்பெண்ட் ஆரணியில் காங். ஆர்ப்பாட்டம்




திருவண்ணாமலை டிச.23.

கடந்த 13ம் தேதி அன்று பாராளுமன்றத்தின் பார்வையாளர் வரிசையில் நுழைந்த இளைஞர்கள் 3 பேர் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் வண்ண புகை குண்டுகளை வீசி முழக்கமிட்ட சம்பவம் நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. நாடாளுமன்றத்திற்கே பாதுகாப்பு இல்லாத நிலையில், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா விளக்கமளிக்க வேண்டுமென கோரிய எதிர்கட்சி எம்பிக்கள் 146 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் சார்பில், ஆரணி பழைய பஸ் நிலையம் அருகில் மத்திய அரசின் பாராளுமன்றத்திற்கு பாதுகாப்பின்மை குறித்தும் 146 பாராளுமன்ற உறுப்பினர்களை சஸ்பெண்ட் செய்த பிஜேபி அரசை கண்டித்தும், வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவர் பிரசாத் தலைமையில் கண்டன ஆர்பாட்டம் நடைப்பெற்றது.

இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டி பி ஜே.ராஜா பாபு , அருணகிரி ,செய்யார் தில்லை, போளூர் ராமசந்திரன், எஸ்.சி.துறை மாநில துணைத் தலைவர் பத்தியாவரம் அ. அன்புதாஸ், அசோக்குமார்,பழனி சுரேஸ் வட்டாரத்தலைவர்கள் ராமலிங்கம், தனஞ்செயன் இளங்கோ, முனிரத்தினம் ,டாக்டர் வாசுதேவன்,பந்தா மணி கலையரசன் , கிருஷ்ணா, சேகர் V.பாபு மற்றும் ஏராளமான காங்கிரஸ் தொண்டர்கள் கலந்து கொண்டு பிஜேபி அரசை கண்டித்து கோஷங்களை எழுப்பி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# பாஜக ஆளும் மாநிலங்களில் சமூக நல்லிணக்க விழா நடைபெறுவதில்லை ஆர் கே நகரில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் அமைச்சர் சேகர்பாபு குற்றச்சாட்டு

சென்னை,டிச,23

சென்னை ஆர். கே. நகரில் சட்டமன்ற உறுப்பினர் ஜேஜே எபினேசர் தலைமையில் கிறிஸ்துமஸ் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது புது வண்ணாரப்பேட்டை டோல்கேட் பேருந்து நிலையம் அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் சிறுபான்மை நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி. கே சேகர்பாபு சிறுபான்மை உரிமைப் பிரிவு செயலாளர் சுபேர்கான், உள்ளிட்டார் பங்கேற்று 2000 பேருக்கு நல திட்ட உதவிகளை வழங்கினர்.

மத போதகர்கள் கிறிஸ்தவ மக்கள் எனமதநல்லிணக்கமாக நடைபெற்ற நிகழ்ச்சியில் மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர சைக்கிள், காது கேளாதவர்களுக்கு காது கேட்கும் கருவி ஊன்றுகோல் உள்ளிட்ட நல திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் சேகர்பாபு மனிதன் மனிதனாக வாழ்வதற்கு உகந்த மாநிலமாக தமிழ்நாடு இருப்பது என்றால் அதற்கு மிகையாகாது என்றார்.

அண்மையில் ஏற்பட்ட புயல் மழை இயற்கை சீற்றம் மாநிலத்தின் எல்லையான கன்னியாகுமரி தொடங்கி திருநெல்வேலி தென்காசி தூத்துக்குடி போன்ற மாவட்டங்களில் பல நெடுஞ்சாலைகள் துண்டிக்கப்பட்டு மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாக இருக்கின்றது.

சென்னையில் 29ஆம் தேதி கடந்த மாதம் தொடங்கி இந்த மாதம் ஏழாம் தேதி வரை இடைவிடாது மழையால் 47 ஆண்டுகளுக்கு பிறகு யாரும் இதுவரை சந்திக்காத பெருமழை சந்தித்துள்ளோம் அதேபோல் தென் மாவட்டங்களில் பெய்து கொண்டு இருக்கின்ற மழை 200 ஆண்டுகளுக்குப் பிறகு கொட்டி தீர்க்கும்படியாக ஆய்வுகள் சொல்லுகின்றன இப்படி பெரும் சீற்றம் வந்த போதும் பேரிடர் ஏற்பட்ட போதும் உங்களை காக்க நான் இருக்கின்றேன் என்று களத்திற்கு ஓடோடி வந்த முதல்வர் தமிழ்நாடு முதல்வர் ஒருவராகத் தான் இருக்க முடியும் என்று தெரிவித்தார்.



கிறிஸ்மஸ் விழா கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம் இந்த விழா மேடை போன்ற நிகழ்வு இந்தியாவில் இருக்கின்ற மாகாண மாநிலங்களில் இல்லை குறிப்பாக பாரதிய ஜனதா ஆளுகின்ற மாநிலங்களில் இது போன்ற சமூக நல்லிணக்கம் இல்லை வெளிப்படையாக சொல்ல வேண்டும் என்றால் மதங்களால் மனிதனைப் பிரித்து தான் இன்று ஒன்றியத்தில் ஆண்டு கொண்டிருக்கிறது பாஜக மதங்களை வைத்து பிளவு ஏற்படுத்தி அந்த பிளவின் வாயிலாக ஒரு சில மாநிலங்களை கைப்பற்றியிருக்கிறது.

வெகு விரைவில் வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் சிறுபான்மையினர் ஆதரவு திராவிட முன்னேற்றத்திற்கு இருக்கும் என்பதற்கு ஐயமில்லை நாடாளுமன்றத் தேர்தல் முக்கியமான தேர்தல் திராவிட முன்னேற்றக் கழகத்தை பலப்படுத்த கிறிஸ்மஸ் திருநாளில் சபதம் ஏற்போம் என்று கேட்டுக் கொண்டார். இதனை அடுத்து பேசிய சிறுபான்மை நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கேளுங்கள் கொடுக்கப்படும் தட்டுங்கள் திறக்கப்படும் என்பதற்கு எடுத்துக்காட்டு தான் இன்று நடைபெறும் ஆட்சி மக்கள் கேட்கின்றதையும் கேட்காததையும் சொன்னதையும் சொல்லாததையும் நிறைவேற்றி கொடுத்து வருகிறார். தமிழ்நாடு முதலமைச்சர் பல்வேறு காரணங்களால் சாதியின் பேரால் மதத்தின் பெயரால் மொழியின் பெயரால் பல்வேறு வேற்றுமை இருந்தாலும் வேற்றுமைகளை கடந்து ஒற்றுமையில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்திய நாட்டில் ஒற்றுமையை சிதற வைத்து வேற்றுமையை காண வேண்டும் என்ற கூட்டம் இருக்கிறது.

தமிழ்நாட்டின் அரசியல் இந்திய அளவில் தொடர்வதற்காக உங்களுடைய ஆதரவை இந்த நேரத்தில் உறுதிப்படுத்தி சபதம் எடுப்போம் என கேட்டுக்கொண்டார் இந்திய திருநாட்டை காப்பாற்ற வேண்டும் என்றால் மக்களால் ஒன்றுபட்டுஜனநாயகதேர்தலில் ஆதரவளித்து மாபெரும் வெற்றி பெற வைக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்டம் செயலளார் தா. இளைய அருணா, பகுதி செயலாளர்கள் லட்சுமணன், ஜெபதாஸ்பாண்டியன், மாவட்ட அவைத் தலைவர் அனிபா, பகுதி துணைச் செயலாளர் பாலு, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பொன் இளவரசன், பிரேம்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்

# கிருஷ்ணாபுரம் கூட்டுச்சாலையில் மோட்டார் சைக்கிள் மீது லாரி மோதியதில் மகன் கண் எதிரே உடல் நசுங்கி மூதாட்டி பலியானார்



ஊத்துக்கோட்டை, டிச23–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், கன்னிகைப்பேர் ஊராட்சியைச் சேர்ந்த கிருஷ்ணாபுரம் கண்டிகை கிராமம்,பெருமாள் கோவில் தெருவில் வசித்து வருபவர் சண்முகம் (42) ஆவார். இவர் செக்யூரிட்டியாக வேலை செய்து வருகிறார்.

இந்நிலையில்,நேற்று முன்தினம் தனது தாய் ராஜம்மாள்(வயது60) என்பவரை தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு கன்னிகைப்பேர் பஜார் வீதிக்கு சென்றார்.வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு மீண்டும் தனது வீடு நோக்கி வந்துகொண்டிருந்தார். கன்னிகைப்பேர் கிராமம்- கிருஷ்ணாபுரம் கூட்டுச்சாலை அருகே வந்து கொண்டிருந்தபோது பின்னால் வந்த லாரி ஒன்று கண்ணிமைக்கும் நேரத்தில் மோட்டார் சைக்கிள் மீது பயங்கரமாக மோதியது.

இந்த விபத்தில் தூக்கி வீசப்பட்ட ராஜம்மாள் தனது மகன் சண்முகம் கண் முன்னே உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே துடிதுடித்து பலியானார். சண்முகம் படுகாயம் அடைந்து ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடினார். அருகில் இருந்தவர்கள் அவரை மீட்டு திருவள்ளூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.தகவல் அறிந்து பெரியபாளையம் காவல் நிலைய போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். இந்த விபத்து குறித்து வழக்கு பதிவு செய்து செய்தனர்.மேலும், விபத்துக்கு காரணமான லாரியை பறிமுதல் செய்து காவல் நிலையம் கொண்டு வந்தனர்.மேலும்,தப்பி ஓடிய லாரி டிரைவரை வலை வீசி தேடி வருகின்றனர்.

# பொன்முடியின் சொத்தை முடக்க வேண்டிய அவசியமில்லை : சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு




சென்னை : டிச. 23, சொத்துக்குவிப்பு வழக்கில் முன்னாள் அமைச்சர் பொன்முடிக்கு3ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அவரது சொத்துக்களை முடக்கக் கோரியமனுவைசென்னை உயர் நீதிமன்றம்தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

2006-11 தி.மு.க ஆட்சிக்காலத்தில் உயர்கல்வி மற்றும் கனிம வளத்துறை அமைச்சராக இருந்த பொன்முடி, வருமானத்துக்கு அதிகமாக 1.72 கோடி ரூபாய் சொத்து சேர்த்ததாக, 2011 அ.தி.மு.க ஆட்சியில் ஊழல் தடுப்பு சட்டத்தின்கீழ் விழுப்புரம்மாவட்ட லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸார் வழக்கு பதிவுசெய்தனர். இந்த வழக்கில் அமைச்சர் பொன்முடி, அவரின் மனைவி விசாலாட்சி இருவரும் குற்றவாளிகள் எனத்தீர்ப்பளிக்கப்பட்டு, மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்ததோடு, இருவருக்கும் தலா 50 லட்சம் ரூபாய் அபாரதமும் விதித்து உத்தரவிட்டிருக்கிறது சென்னை உயர் நீதிமன்றம்.

இதையடுத்து பொன்முடி வகித்துவந்த தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர்கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறைகள் ஆகியவற்றை அமைச்சர் ராஜகண்ணப்பன்னுக்குக் கூடுதலாக ஒதுக்கப்பட்டது.

இந்த நிலையில் பொன்முடியின் சொத்துக்கள் முடக்கப்பட்டதை ரத்து செய்த கீழமை நீதிமன்றத்தின் உத்தரவை ரத்து செய்யக் கோரி லஞ்ச ஒழிப்புத்துறை சார்வில் சென்னை உயர் நீதிமன்றத்தில் கடந்த 2017ம் ஆண்டு மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தது. இந்த மனுவை நேற்று விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஜெயச்சந்திரன், பொன்முடியின் சொத்துக்களை மீண்டும் முடக்க வேண்டிய அவசியமில்லை என்றும் சிறப்பு நீதிமன்றத்தின் உத்தரவு தவறாக இருந்தாலும் தற்போது அதை மாற்ற முடியாது என்றும் கூறியிருக்கிறார். தேவைப்பட்டால் சட்டத்திற்கு உட்பட்டு லஞ்ச ஒழிப்புத்துறை நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்று அனுமதி அளித்து உத்தரவிட்டிருக்கிறார்.

## கண்ணை மறைத்த பனிமூட்டம்

# பைக் மீது பிக்கப் வாகனம் மோதி இருவர் பலியான சோகம்



நத்தம்: டிச. 23, திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகே கணவாய்பட்டி பகுதியில் பைக் மீது பிக்கப் வாகனம் மோதியதில், பைக்கில் வந்த இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ள சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பனிப்பொழிவு அதிகமாக உள்ளது. குறிப்பாக சாலைகளில் எதிரே வரக்கூடிய வாகனங்கள் தெரியாத ஆபத்தான நிலையில் வாகன ஓட்டிகள் செல்லும் நிலை உள்ளது. பெரும்பாலான வாகனங்கள் முகப்பு விளக்குகளை எரியவிட்டவாறு செல்கின்றன.

இந்த நிலையில் நேற்று காலை நத்தம் செம்மேடு பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி (30), வேட்டைக்காரன் புதூரைச் சேர்ந்த அன்பழகன் (32) இருவரும் கோபால்பட்டிக்கு இரு சக்கர வாகனத்தில் சென்றுள்ளனர். பின்னர் தங்களது வேலையை முடித்துவிட்டு மீண்டும் ஊருக்கு திரும்பி கொண்டிருந்தனர்.

அப்போது மேட்டுப்பட்டி அருகே எதிரே வந்த பிக்கப் வாகனம் மோதியதில் இருசக்கர வாகனத்தில் வந்த இருவரும் தூக்கி வீசப்பட்டு பலத்த காயம் அடைந்து சம்பவ இடத்திலேயே இறந்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த சாணார்பட்டி காவல்துறையினர் இறந்தவர்களின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

விபத்து ஏற்படுத்திய பிக்கப் வாகன ஓட்டுநர் கர்ண சூர்யா என்பவரை காவல் நிலையம் அழைத்து வந்து விசாரணை நடத்தி வருகின்றனர். பனிப்பொழிவு அதிகமாக இருந்ததால் எதிரே வந்த வாகனம் தெரியவில்லை என்றும் அதனால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலும் ஒரே ஊரை சேர்ந்த இருவர் சாலை விபத்தில் பலியான சம்பவம் அந்த பகுதி மக்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# வீட்டில் தீ விபத்து : கதவை உடைத்து 6 பேரை காப்பாற்றிய போக்குவரத்து காவலர்



ஹைதராபாத் : டிச. 23, ஹைதராபாத்தில் அடுக்குமாடி கட்டிடத்தில் நேற்று காலை தீ விபத்து ஏற்பட்டது. அப்போது போக்குவரத்து காவலர் ஒருவர், பொதுமக்கள் உதவியுடன் துணிச்சலாக செயல்பட்டு வீட்டுக்குள் சிக்கியிருந்த 6 பேரை பத்திரமாக மீட்டார்.

தெலங்கானா மாநிலம், ஹைதராபாத்தின் பரபரப்பான பகுதியான பஞ்சகுட்டாவில் அடுக்குமாடி கட்டிடம் ஒன்றின் 6வது தளத்தில் நேற்று காலை தீ விபத்து ஏற்பட்டது. அந்த தளத்தில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 6 பேர் சிக்கியிருந்ததாக தெரிகிறது. இந்நிலையில் கட்டிடத்தின் மாடியிலிருந்து புகை வருவதை கண்ட அப்பகுதியினர் அங்கு குவிந்தனர். இந்த சம்பவம் குறித்துஅறிந்தபஞ்சகுட்டா போக்குவரத்து காவலர் ஷரவண்குமார், அப்பகுதி மக்களுடன் இணைந்து உடனடியாக மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டார்.

அப்போது காவலர் ஷரவண்குமார், கையில் கிடைத்த சிறிய கட்டை ஒன்றை கொண்டு மூடியிருந்த கதவை மேலும், கீழுமாக தட்டி உடைத்தார். பின்னர், துணிச்சலுடன் வீட்டின் உள்ளே சென்று அங்கு சிக்கியிருந்த குடும்பத்தினர் 6 பேரை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். இதுகுறித்த வீடியே சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

இதற்கிடையே விபத்து குறித்து தகவலறிந்த தீயணைப்பு வீரர்கள் அங்கு சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். தீ விபத்துக்கான காரணம் குறித்து உடனடியாக தெரியவரவில்லை. இந்த சம்பவம் குறித்து ஹைதராபாத்போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அரியலூரில் பாஜக கண்டன ஆர்ப்பாட்டம்



அரியலூர், டிச.23-

அரியலூரில் பாரதிய ஜனதா கட்சி சார்பில் கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது.

துணை ஜனாதிபதி ஜகதீஷ் தங்கர், பாராளுமன்றசபாநாயகர் ஓம் பிர்லா ஆகியோரை தரக்குறைவாக பேசி, அவமரியாதை செய்து, நடந்து கொண்ட எதிர்க்கட்சிபாராளுமன்ற உறுப்பினர்களை கண்டித்து, அரியலூர் மாவட்ட பாரதிய ஜனதா கட்சி சார்பாக, அரியலூரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி அரியலூர் பழைய பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற கண்டன ஆர்பாட்டத்துக்கு பாஜக மாவட்ட தலைவர் அய்யப்பன் தலைமை வகித்தார். மாவட்ட பொதுச் செயலாளர் அருண் பிரசாத் வரவேற்று பேசினார். கண்டன ஆர்ப்பாட்டத்தில், பாரதியஜனதாகட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினர் திருமானூர் நடராஜன், மாவட்ட பொதுச் செயலாளர்கள் கீழ காவட்டாங்குறிச்சி மகாலிங்கம், ஜெயங்கொண்டம்வக்கீல் ஜெயக்குமார், வக்கீல் தனலட்சுமி, முன்னாள் அரியலூர் நகர தலைவர் வைரவேல், மற்றும் காளிராஜ், நிவாஸ், பொன் சேகர், பிரச்சார பிரிவு மாவட்ட தலைவர் திருமானூர் அசோகன், புல்லட் பாஸ்கர் உள்பட பலர் கலந்துகொண்டனர். முடிவில் அரியலூர் நகர தலைவர் மணிவண்ணன் நன்றி கூறினார்.

# புதுக்கோட்டையில் எல்.ஐ.சி முகவர்கள் சங்கத்தின் 20 ஆண்டு தொடக்க விழா



புதுக்கோட்டை, டிச. 23-

மத்திய அரசே, நிதி அமைச்சகமே எல்.ஐ.சி முகவர்களுக்கு ₹5 லட்சமாக உயர்த்தப்பட்ட பணிக்கொடையை செயல்படுத்த உடனே அரசு இதழில் வெளியிட வேண்டும் என்று லிகாய் அகில இந்திய எல்.ஐ.சி முகவர்கள் சங்க விளக்கக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம் எல்.ஐ.சி அலுவலகம் முன்பு அகில இந்திய எல்.ஐ.சி முகவர்கள் சங்கம் சார்பில் 20-ம் ஆண்டு தொடக்க விழாவையொட்டி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு புதுக்கோட்டை கிளையின் தலைவர் கே.என்.கே. ஆறுமுகம் தலைமை தாங்கி சங்க கொடியை ஏற்றி வைத்தார். செயலாளர் டி.மதியழகன் அனைவரையும் வரவேற்றார். அமைப்புச் செயலாளர் ஜி.வேணுகோபால், கௌரவத் தலைவர் ஜி.தங்கவேல், பொருளாளர் ஏ.பானுமதி, துணைத் தலைவர் ஆர்.சண்முகம், செயற்குழு உறுப்பினர்கள் பால்ராஜ், குமார், தெய்வா, ராஜலெட்சுமி, செல்லமீனாள், அக்பர்சேட், மோகன் ஆகியோர் சங்கம் 20 ஆண்டுகள் கடந்து வந்த பாதையை நினைவு கூர்ந்தனர்.

தமிழ் மாநில செயல் தலைவர் ஆர். நடராஜன் முகவர்களுக்கு நீண்ட நாட்களாக நிறைவேற்றப்படாமல் இருக்கும் எல்.ஐ.சி. முகவர்களுக்கு ₹5 லட்சமாக உயர்த்தப்பட்ட பணிக்கொடையை செயல்படுத்த உடனே அரசு இதழில் வெளியிட வேண்டும், எல்.ஐ.சி. முகவர்களுக்கு பணிப்பாதுகாப்பு விதியை உருவாக்குக, பாலிசி பிரீமியம் மற்றும் வட்டி மீதான ஜிஎஸ்டி வரி விதிப்பை ரத்து செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட 11 அம்ச கோரிக்கைகள் விளக்கி பேசினார். முடிவில் முகவர் வெள்ளையம்மாள் நன்றி கூறினார்.

# வயிற்றுக்குள் வைத்து 306 கிராம் தங்கம் கடத்தல் அறுவை சிகிச்சை செய்து வெளியே எடுத்த அதிகாரிகள்



திருச்சி : டிச. 23, துபாயில் இருந்து திருச்சிக்கு விமானத்தில் வந்த நபர் ஒருவர் தன்னுடைய வயிற்றுக்குள் வைத்து 306 கிராம் தங்கம் கடத்தி வந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

தமிழகத்தில் சென்னை சர்வதேச விமான நிலையத்திற்கு பிறகு, அதிகம் பரவலாக அறியப்பட்டது திருச்சி சர்வதேச விமான நிலையம். இங்கு வரும் விமானங்களில் தங்கம் கடத்தி வருவது வாடிக்கையாக உள்ளது. இதனால், இந்த விமான நிலைய அதிகாரிகள் கூடுதல் விழிப்புடன் இருப்பார்கள். ஆனாலும், கூட அதிகாரிகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, தொடர் தங்கக் கடத்தல் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு துபாயில் இருந்து ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் திருச்சி விமான நிலையத்துக்கு வந்தது. அதில் வந்த ஆண் பயணி ஒருவரின் நடவடிக்கையில் சந்தேகம் ஏற்பட்டு, அதிகாரிகள் அவரை தனியறைக்கு அழைத்துச் சென்று சோதனை நடத்தினர். அதில், அவரின் வயிற்றுக்குள் சிறிய அளவிலான உருண்டைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் அதிர்ச்சியான அதிகாரிகள், உடனடியாக அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ள முடிவு செய்தனர்.

இதைத்தொடர்ந்து, கடத்தலில் ஈடுபட்ட நபரை நீதிபதி முன்பு ஆஜர்படுத்தினர். அங்கு, அவரது வயிற்றுக்குள் இருக்கும் தங்கத்தை அறுவை சிகிச்சை மூலம் எடுக்க அனுமதி பெறப்பட்டது. அதன் பிறகு அந்த நபரை திருச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று எக்ஸ்ரே எடுத்து பார்த்ததில், அவருடைய வயிற்றுக்குள் 20 உருண்டைகள் இருப்பது கண்டறியப்பட்டது. இதையடுத்து, மருத்துவர்கள் அந்த நபருக்கு சிகிச்சை செய்து அவருடைய வயிற்றில் இருந்த 20 உருண்டைகளை பத்திரமாக வெளியே எடுத்தனர். அதன்பிறகு, அந்த உருண்டைகளை சோதனை செய்ததில், பசை வடிவிலான தங்கம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சத்தீஸ்கர் அமைச்சரவை விரிவாக்கம் : ஒரு பெண் உள்பட 9 பேர் அமைச்சர்களாக பதவியேற்பு



ராய்ப்பூர், டிச. 23-

சத்தீஸ்கர் முதல்வர் விஷ்ணு தியோசாய்தலைமையிலான அமைச்சரவை நேற்று விரிவாக்கம் செய்யப்பட்டு ஒரு பெண் உள்பட 9 பேர் புதிதாக அமைச்சர்களாக பதவி ஏற்றுக்கொண்டனர்.

90 சட்டப்பேரவைத் தொகுதிகள் கொண்ட சத்தீஸ்கர் சட்டப்பேரவைக்கு கடந்த நவம்பர் 7-ம் தேதி பொதுத் தேர்தல் நடைபெற்றது. இதில், பாஜக 54 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. பழங்குடி வகுப்பைச்சேர்ந்த விஷ்ணு தியோ சாய் கடந்த 13-ம் தேதி முதல்வராகப் பதவியேற்றார். அதேநோளில், அவருடன் அருண் சாவோ, விஜய் ஷர்மா ஆகியோர் துணை முதல்வர்களாகப் பதவியேற்றனர். மூவருக்கும் ஆளுநர் பிஸ்வபூஷன் ஹரிசந்தன் பதவிப் பிரமாணமும் ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். இந்த விழாவில், பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்நிலையில், சத்தீஸ்கர் அமைச்சரவை நேற்று விரிவாக்கம்செய்யப்பட்டது. ஒரு பெண் உள்பட 9 பேர் அமைச்சர்களாக பதவி ஏற்றுக்கொண்டனர். 8 முறை எம்எல்ஏவான பிரிஜ்மோகன் அகர்வால், முன்னாள் அமைச்சர்கள் ராம்விசார் நேதம், கேதார் காஷ்யப், தயால்தாஸ்பெகல் ஆகியோர் அமைச்சர்களாக பதவியேற்றுக்கொண்டனர். ஐஏஎஸ் அதிகாரியாக இருந்து அரசியலுக்கு வந்த ஓ.பி. சவுத்ரி, தாங் ராம் வெர்மா, லக்ஷ்மி ராஜ்வதே ஆகிய முதல்முறை எம்எல்ஏக்கள் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர். இரண்டு முறை எம்எல்ஏவாக தேர்வான ஷியாம் பிகாரி ஜெய்ஷ்வால், லக்கன்லால் தவான்கன் ஆகியோரும் அமைச்சர்களாகப் பதவியேற்றுக்கொண்டனர்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் 6 பேர், பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த 3 பேர், பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர், பொதுப் பிரிவைச் சேர்ந்த இருவர் ஆகியோர் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சத்தீஸ்கர் மாநிலத்திற்கு முதல்வர் உள்பட 13 பேர் வரை அமைச்சர்களாக நியமிக்கப்படலாம் எனும் நிலையில், 12 பேர் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அமைச்சர்களுக்கான இலாகாக்கள் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

# சபரிமலையில் விமான நிலையம் நிலம் கையகப்படுத்தும் பணி தொடங்கியது



சபரிமலை : டிச. 23, சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக அங்கு விமான நிலையம் அமைக்க கேரள அரசு திட்டமிட்டு அதற்கான நிலஎடுப்பு உள்ளிட்ட பணிகளையும் தொடங்கியுள்ளது.

கேரளத்தில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு உள்ளூர், வெளி மாநிலங்கள் மட்டுமல்லாது சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, நேபாளம் உள்ளிட்ட வெளி நாடுகளில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வருகின்றனர். பக்தர்களுக்காக கேரள அரசு மற்றும் திருவாங்கூர் தேவஸ்தானம் சார்பில் பல்வேறு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

இந்த நிலையில் வெளிநாடுகள் மற்றும் வெளிமாநிலங்களில் இருந்து சபரிமலைக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக சபரிமலையில் விமான சேவையும் தொடங்கப்பட உள்ளது. சபரிமலை அருகே கோட்டயம் மாவட்டத்தில் அமைந்துள்ள எருமேலி செருவள்ளி எஸ்டேட்டில் அரசு, தனியார் பங்களிப்பில் 2,570 ஏக்கர் பரப்பளவில் ரூ.4,000 கோடியில் விமான நிலையம் கட்ட மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

இதற்காக, மத்திய விமான போக்குவரத்துத்துறை சமீபத்தில் ஒப்புதல் அளித்தது. இதையடுத்து மாநில அரசு விமான நிலையம் அமையவுள்ள 2,570 ஏக்கருக்கான நிலத்தைக் கையகப்படுத்துவதற்கான ஒப்புதலை அளித்துள்ளது. மாநில வருவாய்த்துறை அமைச்சர் கே.ராஜன், "சபரிமலை விமான நிலையத்துக்காக நிலங்கள் கையகப்படுத்தப்பட உள்ளன. வனத்துறையின் ஆய்வுக்கு உட்பட்ட இடங்கள் மட்டுமே தேர்வு செய்யப்பட இருக்கின்றன. நிலம் வைத்திருப்பவர்களின் தகவல்களும் முழுமையாக ஆராயப்படும் எனக் கூறியிருக்கிறார். இதன் மூலம் விரைவில் பணிகள் தொடங்கப்பட்டு அடுத்த ஒருசில ஆண்டுகளில் விமான நிலையம் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது

# அதிமுக முன்னாள் அமைச்சர் ஓ.எஸ்.மணியனின் வெற்றி செல்லும் – சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு

சென்னை : டிச. 23, 2021 சட்டப்பேரவை தேர்தலில் வேதாரண்யம் தொகுதியில் அதிமுக முன்னாள் அமைச்சர் ஓ.எஸ்.மணியனின் வெற்றி செல்லும் என சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2021ம் ஆண்டு நடந்த சட்டமன்ற தேர்தலில் வேதாரண்யம் தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட்டு, 12 ஆயிரத்து 329 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னாள் அமைச்சர் ஓ.எஸ்.மணியன் வெற்றி பெற்றார். அவரது வெற்றியை எதிர்த்து திமுக வேட்பாளர் வேதரத்தினம், சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், தொகுதி முழுவதும் 60 கோடி ரூபாய் அளவிற்கு பணப்பட்டுவாடா செய்துள்ளதாகவும், இரு வேறு சமூக மக்களிடையே விரோதத்தை தூண்டியும், பரிசுப் பொருள்களுக்கான டோக்கன் விநியோகித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், வேதாரண்யேஸ்வரர் கோயிலுக்கு சொந்தமான நிலத்தை சுமார் 7000 பேருக்கு பட்டா வழங்கப்படும் என பொய்யான வாக்குறுதி அளித்தும் வெற்றி பெற்றுள்ளதாக மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் அதிகார துஷ்பிரயோகம் மூலம் வேதாரண்யம் நகராட்சி ஆணையர், காவல்துறை துணை கண்காணிப்பாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளை தனது தேர்தல் முகவர்கள் போல பயன்படுத்தியுள்ளதாகவும் மனுவில் குற்றம்சாட்டியிருந்தார். இந்த வழக்கை நீதிபதி தண்டபாணி விசாரித்தார். வழக்கில் அனைத்து தரப்பு வாதங்களும் முடிவடைந்ததை அடுத்து, நேற்று தீர்ப்பு வழங்கினார். அதில், "2021 சட்டப்பேரவை தேர்தலில் வேதாரண்யம் தொகுதியில் அதிமுக முன்னாள் அமைச்சர் ஓ.எஸ். மணியனின் வெற்றி செல்லும். குற்றச்சாட்டில் முகாந்திரம் இல்லை" என கூறி திமுக வேட்பாளர் மனுவை தள்ளுபடி செய்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# சாதிவாரி கணக்கெடுப்பை எதிர்க்கவில்லை தடாலடியாக இறங்கி வந்த ஆர்எஸ்எஸ்



டெல்லி : டிச. 23, சாதிவாரி கணக்கெடுப்பை தாங்கள் எதிர்க்கவில்லை என்றும் அது வெறும் அரசியல் ஆதாயத்துக்கானதாக இருந்துவிடக் கூடாது என்றே கூறுவதாகவும் ஆர்எஸ்எஸ் தரப்பில் தன்னிலை விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் உள்ளிட்ட சில எதிர்க்கட்சிகள் சாதிவாரிகணக்கெடுப்பை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன. பீகாரைத் தொடர்ந்து கர்நாடகா அரசு சாதிவாரி கணக்கெடுப்பு விவரத்தை வெளியிட்டது. நடந்துமுடிந்தஐந்துமாநிலத் தேர்தலில் சாதிவாரி கணக்கெடுப்பு காங்கிரஸ் பிரச்சாரத்தில் பிரதான அம்சமாக இருந்தது.

பாஜக சார்பில் அமித்ஷா, சாதிவாரி கணக்கெடுப்பை தாங்கள் எதிர்க்கவில்லை என்று மட்டும் கூறி வந்தார். இந்நிலையில், பாஜகவின் தாய் அமைப்பான ஆர்எஸ்எஸ் சாதிவாரி கணக்கெடுப்பை விமர்சித்தது. ஆர்எஸ்எஸ் அமைப்பின் முக்கிய நிர்வாகிகளுள் ஒருவரான ஸ்ரீதர் கட்கே, "சாதிவாரி கணக்கெடுப்பு சிலருக்கு அரசியல் ரீதியாக ஆதாயம் அளிக்கலாம். சாதிவாரிகணக்கெடுப்பின் மூலம் அரசியல் கட்சிகளால் தங்களுக்கு சாதகமான வாக்குவங்கி என்னவென்பதைத் தெரிந்துகொள்ள இயலும்.

ஆனால், இத்தகைய கணக்கெடுப்பு சமூகத்துக்கோ, தேசிய ஒருமைப்பாட்டுக்கோ எவ்வித நன்மையும் பயக்காது" எனக் கூறியிருந்தார். இது சர்ச்சையான நிலையில் தற்போது ஆர்எஸ்எஸ் சார்பில் விளக்க அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

ஆர்எஸ்எஸ் அமைப்பின் ஊடகப்பிரிவு தலைவர் சுனில் அம்பேத்கர் வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில், 'சாதிவாரிகணக்கெடுப்பை மேற்கொள்ளும்போது அது எந்தவிதத்திலும் சமூகத்தில் பிளவை ஏற்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். எங்கள் அமைப்பு சாதிப் பாகுபாடுகளைக் கடந்து ஒற்றுமையான இந்து சமூகத்தை உருவாக்கவே விரும்புகிறது.

நல்லிணக்கம், சமூக நீதியின் அடிப்படையில் எவ்வித பிரிவினையும், பேதமும் இல்லாமல் அதைக் கட்டமைக்க விரும்புகிறோம். அதனால் சாதிவாரி கணக்கெடுப்பு என்பது சமூகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்படக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதே எங்களின் கருத்து.

பல்வேறு வரலாற்றுக் காரணங்களால் பல சமூகங்கள் பொருளாதாரம், கல்வி எனப் பல படிநிலைகளில் பின்தங்கிவிட்டன. அரசாங்கங்களும் அத்தகைய பின் தங்கிய சமூகத்தின் வளர்ச்சிக்காக அவர்களுக்கு அதிகாரமளித் தலுக்காக பல நன்மைகளை செய்து வருகின்றன.

அதனால், சாதிவாரி கணக்கெடுப்பின்போது எல்லா அரசியல்கட்சிகளும் சமூகநல்லிணக்கம், ஒற்றுமை உடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதையே நாங்கள் வலியுறுத்துகிறோம். மற்றபடி நாங்கள் சாதிவாரிகணக்கெடுப்பை எதிர்க்கவில்லை' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

## “நான் மல்யுத்தத்தை கைவிடுகிறேன் : பத்மஸ்ரீ விருதையும் திரும்ப ஒப்படைக்கிறேன்” - பஜ்ரங் புனியா



**புதுடெல்லி : டிச. 23,**

**பத்மஸ்ரீ விருதை பிரதமர் மோடியிடம் திரும்ப ஒப்படைப்பதாக இந்திய மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா அறிவித்துள்ளார். இந்திய மல்யுத்த கூட்டமைப்பு விவகாரத்தில் இந்த முடிவை எடுத்துள்ள அவர், “என்னை இனி மல்யுத்தக் களத்தில் பார்க்க மாட்டீர்கள்” என்றும் கூறினார்.**

இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் புதிய தலைவராக, அந்த அமைப்பின் முன்னாள் தலைவரும், பாலியல் குற்றச்சாட்டுக்கு உள்ளானவருமான பிரிஜ் பூஷன் சரண் சிங்கின் நெருங்கிய உதவியாளர் சஞ்சய் சிங் தேர்வு செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக பத்மஸ்ரீ விருதை திரும்ப ஒப்படைக்கும் முடிவை எடுத்துள்ளார் பஜ்ரங் புனியா. எக்ஸ் தளத்தில் இது தொடர்பாக பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தை வெளியிட்டுள்ள பஜ்ரங் புனியா, “அன்புள்ள பிரதமரே, நீங்கள் நன்றாக செயல்படுகிறீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் நாட்டுக்காக வேலை செய்வதில் பிஸியாக இருப்பீர்கள். என்றாலும் மல்யுத்த வீரர்களின் விஷயத்தில் உங்களின் கவனத்தை பெற முயல்கிறேன்.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் நமது மல்யுத்த வீராங்கனைகள் பிரிஷ் பூஷன் சிங் மீது பாலியல் தொல்லைக் குற்றச்சாட்டை முன்வைத்து போராட்டத்தை தொடங்கியது நீங்கள் அறிந்திருப்பீர்கள். நானும் அவர்களின் போராட்டத்தில் கலந்து கொண்டேன். அரசு கடும் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததை அடுத்து அந்தப் போராட்டம் கைவிடப்பட்டது. இதன்பின் மூன்று மாதங்கள் ஆனபோதும்பிரிஜ்பூஷனுக்கு எதிராக எஃப்.ஐ.ஆர் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. நாங்கள் மீண்டும் ஏப்ரல் மாதம் வீதிக்கு வந்து போராடினோம். அப்போதும் பிரிஜ் பூஷனுக்கு எதிராக எஃப்.ஐ.ஆர் உள்ளிட்ட எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, நாங்கள் நீதிமன்றத்தை நாட வேண்டியிருந்தது. அதன் பலனாக எஃப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட்டது. ஜனவரியில் அவருக்கு 19 புகார்தாரர்கள் இருந்தனர். ஆனால், ஏப்ரல் மாதத்துக்குள் அந்த எண்ணிக்கை 7 ஆக குறைந்தது. இதன் பொருள் பிரிஜ் பூஷன் 12 மல்யுத்த வீராங்கனைகளிடம் தனது செல்வாக்கை காண்பித்து மிரட்டியுள்ளார் என்பதே. எங்களின் போராட்டம் 40 நாட்கள் நீடித்த சமயத்தில் மேலும் ஒரு வீராங்கனை போராட்டத்தில் இருந்து பின்வாங்கினார்.

அந்தத் தருணத்தில் எங்களுக்கு மிகவும் அழுத்தம் கொடுக்கப்பட்டது. எங்கள் போராட்ட தளம் இடிக்கப்பட்டது. நாங்கள் டெல்லியில் இருந்து வெளியேற்றப்பட்டதோடு போராட்டம் நடத்த தடை விதிக்கப்பட்டது. இப்போது என்ன செய்வது என்று தெரியாமல் இருந்தோம். எனவே, நாங்கள் எங்கள் பதக்கங்களை கங்கை நதியில் வீச முடிவெடுத்தோம். நாங்கள் எங்கள் இதயத்திலிருந்து போராடினோம். ஆனால், பிரிஜ் பூஷன் போன்ற ஒரு நபரின் தொழில் பார்ட்னரும், அவரின் நெருங்கிய உதவியாளர்தான் தற்போது இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்த தேர்வால் நான் மல்யுத்தத்தை கைவிடுகிறேன். இன்று முதல் நீங்கள் என்னை மல்யுத்த களத்தில் பார்க்க மாட்டீர்கள். எனது பத்மஸ்ரீ விருதையும் திரும்ப ஒப்படைக்கிறேன்” என்று பஜ்ரங் புனியா உருக்கமாக பதிவிட்டுள்ளார்.

### சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ்

## சாம்பியன் பட்டம் வென்றார் டி.குகேஷ் – அர்ஜுன் எரிகைசிக்கு 2–வது இடம்



**சென்னை : டிச. 23,**

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் ‘சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ்’ சாம்பியன்ஷிப் சென்னையில் நடைபெற்று வந்தது.**

கடந்த 15-ம் தேதி தொடங்கிய இந்தத் தொடரின் கடைசி மற்றும் 7-வது சுற்று ஆட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றன. இதில் இந்திய கிராண்ட் மாஸ்டரான டி.குகேஷ், சகநாட்டைச் சேர்ந்த மற்றொரு கிராண்ட் மாஸ்டரான ஹரிகிருஷ்ணாவை எதிர்த்து விளையாடினார். கருப்பு நிற காய்களுடன் விளையாடிய குகேஷ் 31-வது நகர்த்தலின் போது டிரா செய்தார்.

மற்றொரு இந்திய கிராண்ட்மாஸ்டரான அர்ஜுன் எரிகைசி, ஹங்கேரியின் சனான் சுகிரோவுடன் மோதினார். வெள்ளை நிற காய்களுடன் விளையாடிய அர்ஜுன் எரிகைசி 57-வது நகர்த்தலின் போது வெற்றி பெற்றார். உக்ரைனின் பாவெல் எல்ஜனோவ், அமெரிக்காவின் லெவோன் அரோனியன் மோதிய ஆட்டம் டிரா ஆனது.

ஈரானின் பர்ஹாம் மக்சூட்லூ, செர்பியாவின் அலெக்சாண்டர் ப்ரெட்கேவை வீழ்த்தினார். இந்த ஆட்டத்தில் பர்ஹாம் மக்சூட்லூ 22-வது காய் நகர்த்தலின் போது வெற்றி பெற்றார். 7 சுற்றுகளின் முடிவில் டி.குகேஷ், அர்ஜுன் எரிகைசி ஆகியார் தலா 4.5 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருந்தனர். இதைத் தொடர்ந்து டைபிரேக்கரில் குகேஷ் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றார். அர்ஜுன் எரிகைசி 2-வது இடத்தையும், ஹரிகிருஷ்ணா 4 புள்ளிகளுடன் 3-வது இடத்தையும் பிடித்தனர்.

பாவெல் எல்ஜனோவ் (4 புள்ளிகள்), லெவோன் அரோனியன் (3.5 புள்ளிகள்), பர்ஹாம் மக்சூட்லூ (3.5 புள்ளிகள்), சனான் சுகிரோவ் (2.5 புள்ளிகள்), அலெக்சாண்டர் ப்ரெட்கே (1.5 புள்ளிகள்) ஆகியோர் 4 முதல் 8-வது இடங்களுடன் தொடரை நிறைவு செய்தனர்.

சாம்பியன் பட்டம் வென்ற குகேஷுக்கு ரூ.15 லட்சம் பரிசுத்தொகை வழங்கப்பட்டது. 2-வது இடத்தை பிடித்த அர்ஜுன் எரிகைசிக்கு ரூ.10 லட்சமும், 3-வது இடம் பெற்ற ஹரி கிருஷ்ணாவுக்குரூ.8லட்சமும் வழங்கப்பட்டது. சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் தொடரில் சாம்பியன் பட்டம் வென்ற குகேஷ், ஃபிடே சர்க்யூட் தரவரிசையில் முதலிடத்தை பிடித்தார். மேலும் கேண்டிடேட்ஸ் தொடருக்கு தகுதி பெறுவதற்கானவாய்ப்பையும் அதிகரித்துக்கொண்டார்.

## “சதத்தால் சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையை மீண்டும் தொடங்கினார் சஞ்சு சாம்சன்” – கம்பீர்



**பார்ல் : டிச. 23,**

**தென் ஆப்பிரிக்கா அணிக்கு எதிரான சதத்தின் மூலம் சஞ்சு சாம்சன் சர்வதேச கிரிக்கெட்டில் மீண்டும் தடம் பதித்துள்ளார் என்று முன்னாள் வீரர் கவுதம் கம்பீர் தெரிவித்துள்ளார்.**

தென் ஆப்பிரிக்கா அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் 2-1 என்ற கணக்கில் தொடரை வென்றுள்ளது இந்திய கிரிக்கெட் அணி. மூன்றாவது ஒருநாள் போட்டியில் இந்திய வீரர் சஞ்சு சாம்சன் சர்வதேச கிரிக்கெட்டில் தனது முதல் சதத்தை பதிவு செய்தார். 110 பந்துகளை எதிர்கொண்ட சஞ்சு சாம்சன் சர்வதேச போட்டியில் தனது முதல் சதத்தை பதிவு செய்து அசத்தினார். ஆனால், லிசாட் வில்லியம்ஸ் வீசிய 46-வது ஓவரில் கேட்ச் கொடுத்து 108 ரன்களுடன் வெளியேறினார். இவரின் சதத்தின் உதவியுடன் தென் ஆப்பிரிக்காவை எளிதாக வீழ்த்தியது இந்திய அணி.

நீண்ட நாட்களாகவே இந்திய அணியில் இடம் கிடைக்க போராடி வருகிறார் சஞ்சு சாம்சன். ஐபிஎல் போன்ற தொடர்களில் தனது திறமையை நிரூபித்த பின்பும் தொடர்ந்து அவர் இந்திய அணியில் இருந்து தேர்வு செய்வதில் இருந்து ஓரம்கட்டப்பட்டுவந்தார். உலகக் கோப்பை அணியிலேயே இடம்கிடைக்க வேண்டியவர் புறக்கணிக்கப்பட்டது சர்ச்சையானது. இந்த நிலையில் தான் விளையாடிய இரண்டாவது சர்வதேச போட்டியிலேயே சதத்தை பதிவு செய்து ஆச்சர்யப்படுத்தினார் சஞ்சு. இதையடுத்து இணையம் முழுவதும் அவர் குறித்த பேச்சாக தான் உள்ளது.


இதனிடையே, இந்த சதத்தின் மூலம் சஞ்சு சாம்சன் சர்வதேச கிரிக்கெட்டில் மீண்டும் தடம் பதித்துள்ளார் என்று முன்னாள் வீரர் கவுதம் கம்பீர் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக மேலும் பேசிய கம்பீர், “சஞ்சுவுக்கு எவ்வளவு திறமை இருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஐபிஎல்லில் அவர் விளையாடிய இன்னிங்ஸைப் பார்த்து நாங்கள் மட்டுமல்ல, அனைவரும் அதைப் பற்றி பேசியுள்ளனர். ஆனால் தென் ஆப்பிரிக்கா அணிக்கு எதிரான செஞ்சுரி மூலம் அவர் தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையை மீண்டும் தொடங்கியுள்ளார். ஒரு வீரர் செஞ்சுரி எடுத்தால் அவர் தேர்வாளர்களைக் கவர்வது மட்டுமல்லாமல், அவரை தேசிய அணிக்கு தேர்வுசெய்ய தேர்வாளர்களுக்கு அழுத்தம் கொடுக்கும்.

தென் ஆப்பிரிக்கா அணிக்கு எதிரான சஞ்சுவின் செஞ்சுரியும் அப்படியானதுதான். தனது சிறப்பான நாக் மூலம் சஞ்சு தேர்வாளர்களை அசரடித்துள்ளார். அவரை அணியில் தேர்வு செய்ய வேண்டிய நிர்பந்தத்துக்கு தேர்வாளர்களை தள்ளியுள்ளது. அடுத்த உலகக் கோப்பைக்கு இன்னும்நான்கு ஆண்டுகள் உள்ளன. அதுவரை தற்போது என்னை வகை பார்மில் உள்ளாரோ அதே பார்மில் சஞ்சு இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அவரது கீப்பிங் காரணமாக, மிடில் ஆர்டரில் அவருக்கு நல்ல வாய்ப்பு உள்ளது” என்று புகழ்ந்து பேசியுள்ளார்.

வரலாறு சினிமா

### சென்னை சர்வதேச திரைப்பட விழா

## சிறந்த தமிழ்ப் படம் ‘அயோத்தி’, வடிவேலுவுக்கு சிறந்த நடிகர் விருது




**சென்னை : டிச. 23,**

**21-வது சென்னை சர்வதேச திரைப்பட விழா கடந்த 14-ம் தேதி தொடங்கியது. இதில் மொத்தம் 57 நாடுகளின் 126 படங்கள் திரையிடப்பட்டன. இதன் நிறைவு விழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் சிறந்த தமிழ் திரைப்படமாக அயோத்தி தேர்வு செய்யப்பட்டது. மாமன்னன் படத்துக்காக சிறந்த நடிகர் விருதை வடிவேலு பெற்றார்.**

போட்டி பிரிவில் அநீதி, அயோத்தி, மாமன்னன், போர் தொழில், ராவணகோட்டம், செம்பி, விடுதலை உட்பட 12 தமிழ் படங்களும் திரையிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதில் சிறந்த படமாக தேர்வான அயோத்தி பட இயக்குநர் மற்றும் தயாரிப்பாளருக்கு தலா ரூ.1 லட்சம் வழங்கப்பட்டது. இரண்டாவது சிறந்த படமாக தேர்வான உடன்பால் படத்தின் இயக்குநர் மற்றும் தயாரிப்பாளருக்கு தலா ரூ.50,000 வழங்கப்பட்டது. விடுதலை படத்தின் முதல் பாகத்துக்காக இயக்குநர் வெற்றிமாறனுக்கு சிறப்புஜூரி விருது அறிவிக்கப்பட்டது.

மாமன்னன் படத்துக்காக வடிவேலுவுக்கு சிறந்த நடிகர் விருது கொடுக்கப்பட்டது. அயோத்திபடத்துக்காகப்ரீத்தி அஸ்ரானிக்கு சிறந்த நடிகை விருதும், போர்தொழில் பட ஒளிப்பதிவாளர் கலைச்செல்வன் சிவாஜி சிறந்த ஒளிப்பதிவாளராகவும், போர்தொழில் பட எடிட்டர் ஸ்ரீஜித் சாரங் சிறந்த எடிட்டராகவும், மாமன்னன் படத்தில் பணியாற்றிய சுரேன் சிறந்த ஒலிப்பதிவாளராகவும், சிறந்த குறும்படமாக பகவத் இயக்கிய லாஸ்ட் ஹார்ட் தேர்வு செய்யப்பட்டது. உலக சினிமா பிரிவிலும் விருதுகள் வழங்கப்பட்டது.

## சாண்டா கிளாஸாக வந்து சர்ப்ரைஸ் கிஃப்ட் கொடுத்த அமைச்சர் ரோஜா நெகிழ்ச்சியில் மாற்றுத்திறனாளியின் குடும்பம்



**விஜயவாடா : டிச. 23,**

**ஆந்திர மாநில முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டியின் பிறந்த நாளை முன்னிட்டு அம்மாநில அமைச்சரும் நடிகையுமான ரோஜா, மாற்றுத்திறனாளி ஒருவரின் இல்லத்திற்கு சாண்டா கிளாஸ் வேடத்தில் சென்று இன்ப அதிர்ச்சி கொடுத்துள்ள சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

ஆந்திர முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டியின் பிறந்தநாள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது. வழக்கமாக அவரது பிறந்தநாளுக்கு எதாவது ஒரு நல்ல விஷயத்தை ரோஜா செய்வதை வாடிக்கையாக வைத்திருக்கிறார். கடந்த ஆண்டு ஒரு பெண்ணை எம்பிபிஎஸ் படிக்க வைக்க உதவினார். அவரது சொந்தத் தொகுதியான நகரியில் ஒரு கிராமத்தை தத்தெடுத்தார். அந்த வரிசையில் தான் அவர் செய்த செயல் பலரையும் நெகிழச் செய்துள்ளது.

விஜயவாடாவை சேர்ந்த மாற்றுத்திறனாளியான நாகராஜ் சாலை ஓரத்தில் செருப்புக் கடை வைத்திருக்கிறார். இரண்டு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளியான இவருக்கு திருமணமாகி இரண்டு மகள்கள் உள்ளனர். மனைவி ஒரு சிறுநீரகம் செயலிழந்து படுத்த படுக்கையாய் இருக்கிறார். தங்கள் கஷ்டமெல்லாம் தீர தங்கள் வாழ்க்கையில் ஒரு மேஜிக் நடக்காதா என்ற ஏக்கத்தோடு இந்தக் குடும்பத்தினர் இருந்தனர்.

மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் மாதாந்திர பென்ஷனான 3 ஆயிரம் ரூபாய் தான் இவர்களின் நிரந்தர வருமானம். இந்த நிலையில், “நாகராஜ் இரண்டு பெண் பிள்ளைகளைப் படிக்க வைக்க கஷ்டப்படுவதாகவும், அவருக்கு உதவுமாறும் நடிகை ரோஜாவுக்கு அந்தப்பகுதியை சேர்ந்த எக்ஸ் பயனாளர் கோரிக்கை வைத்தனர்.

இதைப் பார்த்துவிட்டு, தனது குழுவினர் விரைவில் தொடர்பு கொள்வார்கள் என பதில் அளித்திருந்தார் ரோஜா. இந்த நிலையில் ஜெகன்மோகன் ரெட்டியின் பிறந்த நாளை முன்னிட்டு சாண்டா கிளாஸ் வேடமணிந்து அமைச்சர் ரோஜா விஜயவாடா வாம்பே காலனியில் உள்ள நாகராஜ் வீட்டுக்கு சப்ரைஸாக சென்றார். கிறிஸ்துவரான நாகராஜ் தனது வீட்டுக்கு சாண்டா கிளாஸ் வந்ததைக் கண்டு நெகிழ்ந்துள்ளார். அதன் பிறகு தான் அவருக்கு உண்மையான ஷாக். சாண்டா கிளாஸாக வந்தது அமைச்சர் ரோஜா என்பதை தெரிந்து கொண்ட அவர் மகிழ்ச்சியில் கண்கலங்கியுள்ளார்.

நாகராஜ் குடும்பத்துடன் கேக் வெட்டி கிறிஸ்துமஸ் கொண்டாடிய ரோஜா, அவரின் பெண் குழந்தைகளுக்கு பரிசுகளை வழங்கினார். அதோடு குழந்தைகளின் படிப்புக்காக 2 லட்சம் ரூபாய் காசோலையையும் வழங்கினார். ரோஜாவின் சர்ப்ரைஸ் விசிட் ஒட்டுமொத்த குடும்பத்தின் முகத்திலும் மகிழ்ச்சியை மலரச் செய்தது.

இது தொடர்பாக அமைச்சர் ரோஜா தனது எக்ஸ் தளத்தில், ‘நாகராஜ் என்ற பெயர் எனது மனதிற்கு மிகவும் நெருக்கமான பெயர். அது எனது தந்தையின் பெயர். அனைவருக்கும் நல்லது செய்ய வேண்டும். ஜெகன் அண்ணா பிறந்தநாளில் இந்த குடும்பத்திற்கு உதவியது மகிழ்ச்சி அளிக்கிறது. அவர்களின் வாழ்த்துக்கள் ஜெகன் அண்ணாவை நிச்சயம் சென்றடையும்’ என நெகிழ்ச்சியுடன் பதிவிட்டுள்ளார்.

## “இது ஒரு கனவுப் பயணம்” – ஆஸ்கர் ரேஸில் ‘2018’ வெளியேறியது குறித்து இயக்குநர் உருக்கம்



**சென்னை : டிச. 23,**

**ஆஸ்கர் ரேஸிலிருந்து மலையாள படமான ‘2018’ வெளியேறியுள்ள நிலையில், “இது ஒரு கனவு பயணம்” என படத்தின் இயக்குநர் ஜூட் ஆந்தணிஜோசப் உருக்கமாக தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் தனது சமூக வலைதள பக்கங்களில் வெளியிட்டுள்ள பதிவில், “அனைவருக்கும் வணக்கம். ஆஸ்கர் விருதுக்கு தேர்வு செய்யப்படும் படங்களின் இறுதி பரிந்துரைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. 88 சர்வதேச மொழித் திரைப்படங்களில் 15 படங்கள் இறுதி செய்யப்பட்டன. இதில் ‘2018’ படம் இடம்பெறவில்லை என்பது வருந்தத்தக்கது. உங்கள் அனைவரையும் ஏமாற்றியதற்காக எனது நலம் விரும்பிகள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவரிடமும்நான்மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்.

இருப்பினும், இந்தப் போட்டியில் இந்தியாவை பிரநிதித்துவப்படுத்த எனக்கு கிடைத்த இந்தக் கனவு பயணத்தின் வாய்ப்பை என் வாழ்நாள் முழுவதும் போற்றுவேன். அதிக வசூல் செய்த திரைப்படம் மற்றும் ஆஸ்கர் விருதுக்கான இந்தியாவின் அதிகாரபூர்வ படம்என்றபெருமைஒவ்வொரு இயக்குநரின் வாழ்க்கையிலும் நிகழவேண்டும்எதிர்பார்க்கும் அரியசாதனையாகும். இந்தப் பயணத்துக்கு என்னை தேர்ந்தெடுத்ததற்காக இறைவனுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். படத்தின் தயாரிப்பாளர்கள், தொழில்நுட்ப கலைஞர்கள், நடிகர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்” என்றார்.

இறுதியில், “எனது அடுத்த கனவின் ஆரம்பம் இன்று தொடங்குகிறது. ஆஸ்கர் விருதுகள் காத்திருக்கின்றன. நான் கலந்துகொள்ள தயாராக இருக்கிறேன்” என நம்பிக்கையுடன் பதிவிட்டுள்ளார். 96-வது ஆஸ்கர் விருது வழங்கும் விழா அடுத்த ஆண்டு மார்ச் 10-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற உள்ளது. இதில் இந்தியாவிலிருந்து சிறந்த வெளிநாட்டு திரைப்படத்துக்கான பிரிவின் போட்டிக்குமலையாளபடமான ‘2018’ அதிகாரபூர்வமாக அனுப்பிவைக்கப்பட்டது. இந்நிலையில், தற்போது இந்தப் பிரிவில் 15 படங்கள் இறுதிப் பரிந்துரையில் இடம்பெற்று அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதில் ‘2018’ படம் இடம்பெறவில்லை. ஆனால், ஜார்க்கண்ட் கூட்டுப் பாலியல் வன்கொடுமை வழக்கை அடிப்படையாகக் கொண்ட ‘டு கில் எ டைகர்’ என்ற ஆவணப்படம், சிறந்த ஆவணப் படப் பிரிவின் போட்டிக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளது. நிஷா பஹுஜா இதை இயக்கியுள்ளார்.

## நடிகர் மன்சூர் அலிகானுக்கு ரூ.1 லட்சம் அபராதம் – சென்னை உயர் நீதிமன்றம் அதிரடி

**சென்னை : டிச. 23.**

**நடிகர் மன்சூர் அலி கானுக்கு ரூ.1 லட்சம் அபராதம் விதித்து அவரது மனுவை தள்ளுபடி செய்தது சென்னை உயர் நீதிமன்றம், அபராதத் தொகையை இரண்டு வாரங்களில் சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்கு செலுத்த வேண்டும் என உத்தரவிட்டுள்ளது.**

நடிகை த்ரிஷா குறித்து சர்ச்சை கருத்துக்கள் தெரிவித்ததாக, நடிகர் மன்சூர் அலிகானுக்கு, நடிகை த்ரிஷா, நடிகை குஷ்பு, நடிகர் சிரஞ்சீவி உள்ளிட்ட திரைப்பட பிரபலங்களும் கடும் எதிர்ப்பை தெரிவித்திருந்தனர். தேசிய மகளிர் ஆணைய பரிந்துரைப்படி சென்னை ஆயிரம் விளக்கு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில், நடிகர் மன்சூர் அலிகானுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இந்த விவகாரத்தில் நடிகர் மன்சூர் அலிகான் மன்னிப்பு கோர, நடிகை த்ரிஷாவும் மன்னிப்பை ஏற்றுக் கொள்ளும் வகையில் எக்ஸ் வலைதளத்தில் பதிவிட்டு இருந்தார். இந்த சூழ்நிலையில் முழு வீடியோவையும் பார்க்காமல் தனது நற்பெயருக்கு களங்கம் கற்பித்ததாக குற்றம் சாட்டி, நடிகை த்ரிஷா, நடிகை குஷ்பூ, நடிகர் சிரஞ்சீவி ஆகியோருக்கு எதிராக தலா ஒரு கோடி ரூபாய் மான நஷ்டாடு வழக்கு தொடர அனுமதி கேட்டு நடிகர் மன்சூர் அலிகான் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நீதிபதி என்.சதீஷ்குமார் முன்பு விசாரணைக்கு வந்தபோது, நடிகை த்ரிஷா தரப்பில், மூன்று பேருக்கும் எதிராக ஒரே வழக்காக தாக்கல் செய்ய முடியாது என்றும், தன்னைப் பற்றி சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவித்த மன்சூர் அலிகான், குற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதை தொடர்ந்து நிபந்தனையற்ற மன்னிப்பு கோரினார் என்றும், தனதுகருத்து எதிர்ப்புகருத்து தான் என்றும் வாதிடப்பட்டது.

மன்சூர் அலிகான் தரப்பில், மூன்று பேருக்கு எதிராகவும் ஒரே வழக்காக தாக்கல் செய்ய முடியும் என்றும், தான் பேசிய வீடியோவை தாக்கல் செய்ய தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி சதீஷ்குமார், நடிகர் மன்சூர் அலிகான் கூறிய சர்ச்சைக்குரிய கருத்துகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தே, மூவரும் எக்ஸ் வலைதளத்தில் தங்கள் கருத்தை பதிவை செய்திருப்பதாகவும், இதை அவதூறாக கருத முடியாது எனவும் விளக்கம் அளித்துள்ளார்.

பெண்களுக்கு எதிராக கருத்து தெரிவிக்கும்போது அதற்கு அனைவரும் எதிர்ப்பு தெரிவிப்பது மனித இயல்பு. இதே விவகாத்தில் மன்சூர் அலிகான் மன்னிப்பும் கோரியுள்ளார். உரிமையியல் நடைமுறை சட்டப்படி மூன்று பேருக்கும் எதிராக ஒரே நேரத்தில் வழக்கு தொடர முடியாது என நீதிபதி தெரிவித்துள்ளார்.



நீதிமன்ற நேரத்தை வீணடிக்கும் நோக்கத்திலும், விளம்பர நோக்கத்திற்காகவும் வழக்கு தொடரப்பட்டுள்ளதாக கூறி, மன்சூர் அலிகான் மனுவை ஒரு லட்ச ரூபாய் அபராதத்துடன் தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். இந்த அபராதத்தொகையைஇரண்டு வாரங்களில் சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்கு செலுத்த வேண்டுமென மன்சூர் அலிகானுக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

வரலாறு உலகம்

# பல்கலைக்கழகத்தில் பயங்கரம்
## மாணவர் துப்பாக்கியால் சுட்டதில் 14 பேர் பலி



**பிரேக் : டிச. 23,**

**செக் குடியரசின் பிரேக் நகரில் உள்ள சார்லஸ் பல்கலைக்கழகத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 14 பேர் உயிரிழந்துள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

சார்லஸ் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையில் டேவிட் கொசாக் ( 24 ) என்ற மாணவர் படித்து வந்தார். படிப்பில் சிறந்த மாணவராக அவர் விளங்கி வந்தார். இந்த நிலையில் தத்துவத்துறை கட்டிடத்திற்கு வந்த அவர் திடீரென அங்கிருந்தவர்களை நோக்கி துப்பாக்கியால் சரமாரியாக சுட்டுள்ளார். இதில் அப்பாவி மாணவர்கள் 14 பேர் பரிதாபமாக கொல்லப்பட்டனர். 30 பேர் காயமடைந்தனர். அவர்களில் ஒன்பது பேருக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து தகவல் அறிந்து அங்கு விரைந்துவந்த போலீசார் துப்பாக்கியால் சுட்ட மாணவன் டேவிட் கொசாக்கை பிடிக்க முயன்ற போது அவர்களை நோக்கியும் துப்பாக்கியால் சுட முயன்றார் கொசாக். அதனால் அவரை நோக்கி போலீஸார் துப்பாக்கியால் சுட்டனர். இதில் அந்த மாணவர் கொல்லப்பட்டார். இதனால் அங்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆக உயர்ந்தது. அந்த கட்டிடத்திலிருந்து அனைவரும் வெளியேற்றப் பட்டுள்ளதாகவும், தொடர் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இது குறித்த தகவல்கள் அறிந்ததும் பிரதமர் பீட்டர் ஃபியாலா தனது சுற்றுப் பயணத்தை ரத்து செய்துவிட்டு பிரேக் நகருக்கு விரைகிறார். இது தொடர்பாக அந்நாட்டு உள்துறை அமைச்சர் விட் ரகுசான் கூறுகையில், "மக்கள் போலீஸாருடன் ஒத்துழைக்க வேண்டுகிறேன். குற்றச் செயலில் ஈடுபட்ட நபர் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளார். இருப்பினும் வளாகம் முழுவதும் போலீஸார் தீவிரத்தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் எந்த தீவிரவாத நோக்கத்துடனும் அமைப்புடனும் தொடர்புடையது இல்லை எனவும் விட் ரகுசான் தெரிவித்துள்ளார். சம்பவம் நடந்த இடத்தில் வெடிபொருள்கள் ஏதேனும் உள்ளதா எனக் காவல்துறையினர் ஆய்வு நடத்தி வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

# குடியரசு தின விழாவில் பங்கேற்க
## பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரானுக்கு அழைப்பு



**புதுடில்லி : டிச. 23,**

**2024ம் ஆண்டு ஜனவரி 26ம் தேதி நடைபெறவுள்ள குடியரசு தினவிழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்க பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரனுக்கு இந்தியாவின் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.**

குடியரசு தினவிழாவின் போது பல்வேறு நட்பு நாடுகளைச் சேர்ந்த தலைவர்களை சிறப்பு விருந்தினர்களாக அழைப்பது இந்தியாவின் வழக்கம். கொரோனா பரவல் காரணமாக கடந்த 2021 மற்றும் 2022-ல் சிறப்பு விருந்தினர்கள் அழைக்கப்படவில்லை. கொரோனா அபாயம் நீங்கியபின்னர் 2023ம் ஆண்டு குடியரசு தினவிழா சிறப்பு விருந்தினராக எகிப்து நாட்டு அதிபர் அப்தெல் ஃபதா அல்-சிசி பங்கேற்றார். அதற்கு முந்தைய ஆண்டுகளில் பிரேசில் அதிபர் ஜெய்ர் போல்சனாரோ, தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ரமபோசா, அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா, ஜப்பான் பிரதமர் ஷின்சோ உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர்.

இந்நிலையில் 2024 குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்க பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. முன்னதாக கடந்த ஜூலை மாதம், பிரான்ஸ் அதிபரின் அழைப்பை ஏற்று, அந்நாட்டின் தேசிய தின கொண்டாட்டத்தில் சிறப்பு விருந்தினராகப் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார்.

அப்போது, பிரதமர் நரேந்திர மோடிக்கு, இம்மானுவேல் மேக்ரன், தங்கள் நாட்டின் உயரிய விருதான கிராண்ட் கிராஸ் ஆஃப் தி லீஜியன் ஆஃப் ஹானர் விருதை வழங்கி கவுரவித்தார். இதற்கு முன் இந்த விருதை, தென்னாப்பிரிக்காவின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா, இங்கிலாந்தின் தற்போதைய அரசர் சார்லஸ், ஜெர்மனியின் முன்னாள் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கல் உள்ளிட்ட தலைவர்கள் பெற்றுள்ளனர். இந்த சூழலில் வரும் ஆண்டில் நடைபெறவுள்ள குடியரசு தின விழாவில் பங்கேற்க பிரான்ஸ் அதிபருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# இந்தியா உடனான கூட்டாண்மையை அமெரிக்கா ஆழப்படுத்தியுள்ளது
## ஆண்டனி பிளிங்கன்



**வாஷிங்டன் : டிச. 23,**

**ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜி-7 நாடுகளுடன் அமெரிக்கா நெருக்கமாக இணைந்துள்ளது என ஆண்டனி பிளிங்கன் தெரிவித்தார்.**

அமெரிக்க வெளியுறவுத்துறை மந்திரி ஆண்டனி பிளிங்கன் வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது;- "இந்தியா உடனான கூட்டாண்மையை அமெரிக்கா ஆழப்படுத்தியுள்ளது. குவாட் கூட்டணி மூலம் இந்தியா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியாவுடன் ஒத்துழைப்பை மேம்படுத்தியுள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜி - 7 நாடுகளுடன் அமெரிக்கா முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு நெருக்கமாக இணைந்துள்ளது." என்று ஆண்டனி பிளிங்கன் தெரிவித்தார்.

# எரிமலையால் பாதிக்கப்பட்ட பபுவா நியூ கினியாவுக்கு நிவாரணப் பொருட்கள் : இந்தியா அனுப்பியது



**புதுடெல்லி : டிச. 23,**

**எரிமலை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட பபுவா நியூ கினியாவுக்கு 1 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான நிவாரணப் பொருட்களை சிறப்பு விமானம் மூலம் இந்தியா அனுப்பியது.**

தெற்கு பசிபிக் நாடான பபுவா நியூ கினியாவில் உள்ள 'உலவுன்' என்ற எரிமலை கடந்த நவம்பர் 20-ம் தேதி சீறி புகையை வெளியேற்றியது. இந்த சாம்பல் புகை வானில் 15 கி.மீ உயரத்துக்கு எழும்பியது. 1,700-ம் ஆண்டுகளில் இருந்து அவ்வப்போது இந்த எரிமலை வெடித்து வருகிறது. கடைசியாக கடந்த 2019-ம் ஆண்டில் உலவுன் எரிமலை வெடித்தது. அப்போது சுமார் 5 ஆயிரம் பேர் இப்பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டனர். தற்போது இப்பகுதியில் இருந்து 26,000-க்கும் மேற்பட்டோர் வெளியேற்றப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உடனடியாக மனிதாபிமான உதவிகள் தேவை என வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இந்தியா-பசிபிக் தீவுகள் ஒத்துழைப்பு அமைப்பில், இந்தியாவின் நெருங்கிய நட்பு நாடாக பபுவா நியூகினியா உள்ளது.

இதனால் பபுவா நியூகினியா மக்களுக்கு உதவ இந்தியா முடிவு செய்தது. அதன்படி ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான பொருட்களை பபுவா நியூ கினியாவக்கு இந்தியா சிறப்பு விமானம் மூலம் அனுப்பியது. இது குறித்து வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் அரிந்தம் பாக்சி செய்தியாளர்களிடம் கூறியதாவது: எரிமலை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட பபுவா நியூகினியாவுக்கு, 1 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் நிவாரணப் பொருட்களை அனுப்பும் என இந்தியா அறிவித்திருந்தது. அதன்படி நிவாரணப் பொருட்களுடன் சிறப்பு விமானம் டெல்லியிலிருந்து பபுவா நியூகினியா சென்றது. எப்போதும் உதவும் இந்தியா இதில் கூடாரங்கள், படுக்கை விரிப்புகள், சுகாதார பொருட்கள், ரெடிமேட் உணவுப் பொருட்கள், தண்ணீர் சேமிப்பு தொட்டிகள், அத்தியாவசிய மருந்துகள், அறுவைசிகிச்சை உபகரணங்கள், சானிட்டரி நாப்கின்கள் போன்ற 11 டன் நிவாரணப் பொருட்களும், 6 டன்கள் மருத்துவ உதவி பொருட்களும் அனுப்பப்பட்டன என்று அரிந்தம் பாக்சி கூறினார். பபுவா நியூ கினியாவில் இயற்கை பேரிடர்கள் ஏற்படும் போதெல்லாம், இந்தியா உதவியுள்ளது. கடந்த 2018-ம் ஆண்டு பபுவா நியூ கினியாவில் பூகம்பம் ஏற்பட்டபோதும், 2019-ம் ஆண்டில் எரிமலை சீற்றம் ஏற்பட்டபோதும், இந்தியா ஏற்கனவே உதவி செய்தது குறிப்பிடத்தக்கது.

# காணாமல் போன இந்திய மாணவி பற்றி தகவல் அளித்தால் 10 ஆயிரம் டாலர் பரிசு
## அமெரிக்க புலனாய்வு அமைப்பு அறிவிப்பு



**நியூயார்க் : டிச. 23,**

**குஜராத் மாநிலத்தின் வதோதராவை சேர்ந்தவர் மயூஷி பகத். இவர் 2016-ல் அமெரிக்கா வந்தார். நியூ ஜெர்சிமாகாணத்தில் உள்ள நியூயார்க் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியில் படித்துக் கொண்டிருந்தார். ஜெர்சி சிட்டி பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பில் இவர் தங்கியிருந்தார்.**

கடந்த 2019 ஏப்ரல் 29-ம் தேதி மாலை, இவர் தனது குடியிருப்பை விட்டு வெளியேறினார். அதன் பிறகு அவரை காணவில்லை. இது குறித்து அவரது குடும்பத்தினர் 2019, மே 1-ம் தேதி புகார் அளித்தனர். கடந்த ஆண்டு ஜூன் மாதம் அமெரிக்க புலனாய்வு அமைப்பு (எஃப்பிஐ) காணாமல் போனவர்கள் பட்டியலில் மயூஷியை சேர்த்தது. இந்நிலையில் மயூஷி பற்றிய தகவலுக்கு எஃப்பிஐ வெகுமதி அறிவித்துள்ளது.

மயூஷி பற்றி தகவல் அறிந்தவர்கள் நெவார்க் நகரில் உள்ள எஃப்பிஐ அலுவலகம் அல்லது ஜெர்சி சிட்டி நகர காவல் துறையில் தெரிவிக்கலாம். இதன் மூலம் மயூஷி இருப்பிடம் கண்டுபிடிக்கப்பட்டால் அல்லது அவர் மீட்கப்பட்டால் தகவல் அளித்தவருக்கு 10 ஆயிரம் டாலர் (இந்திய ரூபாய் மதிப்பில் சுமார் 8.33 லட்சம்) பரிசு வழங்கப்படும் என்று எஃப்பிஐ தெரிவித்துள்ளது. மயூஷி பகத் ஆங்கிலம், இந்தி, உருது ஆகிய மொழிகளில் பேசுவார். நியூஜெர்சியில் உள்ள சவுத் ப்ளைன்ஃபீல்டு பகுதியில் இவருக்கு நண்பர்கள் உண்டு. 5 அடி 10 அங்குல உயரம், கறுப்பு முடி, பழுப்பு நிற கண்கள் கொண்டவர். அவர் கடைசியாக வண்ண பேண்ட் மற்றும் கருப்பு நிற டி-ஷர்ட் அணிந்திருந்தார் என எஃப்பிஐ விவரித்துள்ளது.

# 7.6 சென்டிமீட்டர் மழைக்கே மிதக்கும் கலிபோர்னியா வெள்ளத்தால் மிதக்கும் குடியிருப்புகள்



**கலிபோர்னியா : டிச. 23,**

**அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் 7.6 சென்டிமீட்டருக்கும் அதிகமாக பெய்த கனமழை காரணமாக வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால், பொதுமக்கள் பெரும் இன்னலுக்கு ஆளாகியுள்ளனர்.**

அமெரிக்காவின் கலிபோர்னியா கடற்கரையோர பகுதியில் பசிபிக் பெருங்கடலில் உருவான காற்றழுத்தம் காரணமாக, கலிபோர்னியா மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக கடற்கரையோர நகரங்களில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு மணி நேரத்திற்குள் 7.6 சென்டிமீட்டர் அளவிற்கு கனமழை பெய்ததால் கலிபோர்னியா மாகாணத்தின் பல்வேறு நகரங்கள் வெள்ள நீரில் மிதக்கின்றன.

முழங்கால் அளவிற்கு தண்ணீர் சாலைகளில் தேங்கி இருப்பதால் வாகன ஓட்டிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். மழை தற்போது குறைந்துள்ள நிலையில் வெள்ளநீர் வெளியேறாததால் குடியிருப்புகளில் வசிக்கும் மக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் பெரும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். சாலையில் சென்று கொண்டிருந்த கார்கள் அடிக்கடி பழுதாகி நின்று விடுவதால், அதில் இருக்கும் வாகன ஓட்டிகளை போலீஸார் மீட்டு வருகின்றனர். மேலும் மழையால் பாதிக்கப்படாத சாலைகள் வழியாக போக்குவரத்தை சீர் செய்யும் பணியிலும் காவலர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த கனமழை காரணமாக 60க்கும் மேற்பட்ட வீடுகள் முற்றிலும் சேதம் அடைந்திருப்பதாகவும், முதியவர்கள் தங்கி இருந்த குடியிருப்பு ஒன்றில் மழை நீர் புகுந்ததால் பாதிக்கப்பட்ட ஏராளமானவர்கள் மீட்கப்பட்டு அருகில் உள்ள கல்லூரி வளாகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனிடையே சாலைகளில் கடும் வாகன நெரிசல் நிலவி வருவதால் பொதுமக்கள் தற்காலிகமாக வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. சூறாவளி உருவாகும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் கனமழை மட்டும் கொட்டியதால் பொதுமக்கள் சற்றே ஆறுதல் அடைந்துள்ளனர்.

# தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் தமிழ் கட்சி தலைவர்களுடன் இலங்கை அதிபர் பேச்சுவார்த்தை



**கொழும்பு : டிச. 23,**

**இலங்கையில் ஏற்பட்ட கடும் பொருளாதார நெருக்கடி அந்நாட்டு அரசியலையும் மாற்றி அமைத்தது. பொதுமக்கள் நடத்திய போராட்டங்களால் இலங்கையில் அதிபராக ரணில் விக்கிரமசிங்கே கடந்த ஆண்டு பொறுப்பேற்றுக கொண்டார்.**

இதையடுத்து அவர் நாட்டில் நிலவி வந்த பொருளாதார நெருக்கடியில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக மீளுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். இந்த நிலையில் இலங்கையில் வசித்து வரும் தமிழர்களின் பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் தமிழ் கட்சி தலைவர்களுடன் அதிபர் ரணில் விக்கிரமசிங்கே பேச்சுவார்த்தை நடத்தினார். இலங்கை தலைநகர் கொழும்பில் நடந்த இந்த கூட்டத்தில் தமிழ் கட்சியை சேர்ந்த தலைவர்கள் கலந்து கொண்டனர். அவர்களுடன் இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்களுக்கான நில உரிமைகள் வழங்குதல், நல்லிணக்கம், மீன்பிடி தொடர்பாக சட்டங்களை அமல்படுத்துவது உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

மேலும் இந்தியாவில் உள்ள அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள இலங்கை தமிழர்கள் சந்திக்கும் சவால்கள் குறித்தும், அவர்களை மீண்டும் இலங்கையில் குடியமர்த்துவது தொடர்பாகவும் இந்த கூட்டத்தில் ஆலோசனை நடத்தப்பட்டது.

# அரசு ரகசியங்களை கசியவிட்டதாக வழக்கு பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு ஜாமீன்



**இஸ்லாமாபாத் : டிச. 23,**

**அரசு ரகசியங்களை கசியவிட்ட குற்றச்சாட்டில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு அந்நாட்டு உச்ச நீதிமன்றம் ஜாமீன் வழங்கி உத்தரவிட்டுள்ளது.**

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீதான ஊழல் வழக்கு நிரூபணமானதை அடுத்து கடந்த ஆகஸ்ட் முதல் அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவர் மீது, அரசு ரகசியங்களை கசியவிட்ட குற்றச்சாட்டு உள்பட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அரசு ரகசியங்களை கசியவிட்ட குற்றச்சாட்டில் ஜாமீன் கோரி அவரது தரப்பில் அந்நாட்டு உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இதே வழக்கில் சிறையில் உள்ள முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் ஷா மெகமூத் குரோஷி சார்பிலும் ஜாமீன் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுக்களை விசாரித்து வந்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சர்தார் தாரிக் மசூத், அதார் மினால்லா, சையத் மன்சூர் அலி ஷா ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று தீர்ப்பளித்தது. அதன்படி, இருவருக்கும் நிபந்தனை ஜாமீன் வழங்கி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இருவரும் தலா ரூ.10 லட்சம் பிணைத் தொகை செலுத்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் ஜாமீன் அளித்துள்ள போதிலும் இம்ரான் கான் விடுவிக்கப்படுவது சந்தேகமே என அவரது வழக்கறிஞர் ஒருவர் தெரிவித்துள்ளார். இம்ரான் கான் மீது மேலும் பல வழக்குகள் நிலுவையில் உள்ளதால், அவர் விடுவிக்கப்படுவாரா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என அவர் கூறினார்.

# ரஷ்ய அதிபர் தேர்தல் – விளாடிமிர் புதினுக்கு எதிராக களமிறங்கினார் பெண் ஊடகவியலாளர்



**ரஷ்யா : டிச. 23,**

**ரஷ்ய அதிபர் தேர்தலில் போட்டியிட அந்நாட்டு அதிபர் விளாடிமிர் புதினுக்கு எதிராக போருக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருபவரும், பெண் ஊடகவியலாளருமான எகாதேரினா தன்சோவா வேட்பு மனு தாக்கல் செய்துள்ளார்.**

ரஷ்யாவில் கடந்த 1999ம் ஆண்டு அதிபராக இருந்த போரிஸ் யெல்ட்சின் பதவி விலகவே, தற்காலிக அதிபராக விளாடிமிர் புதின் பதவி ஏற்றார். இதையடுத்து 2000ம் ஆண்டில் நடந்த அதிபர் தேர்தலில் வெற்றி பெற்று புதிய அதிபராக புதின் பொறுப்பேற்றார். தற்போது அதிபராக உள்ள புதினின் பதவி காலம் 2024ம் ஆண்டு மே மாதம் நிறைவடைகிறது.

இந்தநிலையில் விளாடிமிர் புதின் 2036ம் ஆண்டு வரை அதிபர் பதவியில் நீடிக்க வழி செய்யும் வகையிலும், இன்னும் 2 முறை தேர்தலில் போட்டியிடும் வகையிலும் ரஷ்ய அரசியலமைப்பில் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதிபர் தேர்தல் 2024ம் ஆண்டு மார்ச் 17ம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து 24 ஆண்டுகளுக்கும் மேலாக 4 முறையாக அதிபராக இருக்கும் புதின் மீண்டும் போட்டியிடவுள்ளார்.


இதையடுத்து அதிபர் தேர்தலில் போட்டியிட விளாடிமிர் புதின் மனுத்தாக்கல் செய்துள்ளார். இதற்கான ஆவணங்களை புதின் சார்பில் ரஷ்ய தேர்தல் கமிஷனிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இந்நிலையில், ரஷ்ய அதிபர் தேர்தலில் போட்டியிட போருக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருபவரும், பெண் ஊடகவியலாளருமான எகாதேரினா தன்சோவா வேட்பு மனு தாக்கல் செய்துள்ளார். ரஷ்யாவில் பலம் வாய்ந்த புதினுக்கு எதிராக ஒரு பெண் ஊடகவியலாளர் மனுத்தாக்கல் செய்துள்ளது பெரும் பரபரப்பை உருவாக்கியுள்ளது.

# கடுமையான சித்தாந்த நிலைப்பாடு தேவையில்லை – போப் பிரான்சிஸ் அறிவுறுத்தல்

**ரோம் : டிச. 23,**

**போப் பிரான்சிஸ் நடத்திய இந்த நிகழ்வில் ரோமை மையமாக கொண்டு செயல்பட்டு வரும் கர்தினால்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.**

போப் பிரான்சிஸ் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வாடிகனில் நடந்த நிகழ்வில் கிறிஸ்துமஸ் வாழ்த்து செய்தி பகிர்ந்து கொண்டார். அப்போது கடுமையான சித்தாந்த நிலைப்பாடுகளை கைவிட வேண்டும் என்றும், அவை இன்றைய யதார்த்தங்களை புரிந்து கொள்வதில் இருந்து தடுத்து விடும் என்றும் வாடிகன் நிர்வாகத்தினருக்கு அவர் எச்சரிக்கை விடுத்தார்.



இது தொடர்பாக மேலும் அவர் கூறுகையில், 'நல்ல நோக்கங்கள் என்ற போர்வையில் அடிக்கடி நம்மை யதார்த்தத்திலிருந்து பிரித்து முன்னேற விடாமல் தடுக்கும் கடுமையான சித்தாந்த நிலைப்பாடுகளுக்கு எதிராக விழிப்புடன் இருப்போம்' என கேட்டுக்கொண்டார். போப் பிரான்சிஸ் நடத்திய இந்த நிகழ்வில் ரோமை மையமாக கொண்டு செயல்பட்டு வரும் கர்தினால்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தன்பாலின திருமணத்தை ஏற்றுக்கொண்டு அதை ஆசீர்வதிக்க போப் பிரான்சிஸ் சமீபத்தில் அனுமதி அளித்திருந்தார். அதன் தொடர்ச்சியாக இன்றைய யதார்த்தத்தின்படி செயல்படுமாறு நிர்வாகத்தை அவர் கேட்டுக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்துக்கு வழங்க வேண்டிய பேரிடர் நிதி ரூ. 900 கோடியை மத்திய அரசு வழங்கிவிட்டது





# கவுதம சிகாமணிக்கு எதிரான வழக்கு குற்றச்சாட்டுப் பதிவுக்காக ஜன.4க்கு ஒத்திவைப்பு

# சென்னை வானிலை ஆய்வு மையத்தை மூடிவிடலாம்: அன்புமணி ஆவேசம்




| சென்னை / புதுக்கோட்டை | 23.12.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை

வரலாறு

நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

சரண் சிங் , 5வது இந்தியப் பிரதமர் (பி.1902) (இ.1987)



மம்நூன் உசைன் , பாக்கிஸ்தானின் 12-வது அரசுத்தலைவர் (பி.1940)



அனிதா பிரதாப் , இந்திய ஊடகவியலாளர், எழுத்தாளர் (பி.1958)



## இன்றைய நினைவு நாள்

சா. தர்மராசு சற்குணர் , தமிழகத் தமிழறிஞர் (பி.1877) (இ.1952)



பி. கக்கன் , இந்திய விடுதலை போராட்ட வீரர், அரசியல்வாதி (பி.1908) (இ.1981)




பி. வி. நரசிம்ம ராவ் , 9வது இந்தியப் பிரதமர் (பி.1921) (இ.2004)



## தேசிய உழவர் நாள் (இந்தியா)